ஐரோப்பாவிலும் இலங்கையிலும் விநியோகமாகும் இலவச பத்திரிகை

# தமிழினி

THAMILINI

அக்டோபர் 15- நவம்பர் 14 | மலர் 1 இதழ் 1

## எச்சரிக்கை

வட மாகாணசபை தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேறி தமிழ்க் கூட்டமைப்பு ஏகோபித்த வெற்றியையும் பெற்று ஆட்சி அமைத்துள்ள வேளையில் தமது குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு பதவி கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் குடுமி பிடிச் சண்டை போடத் தயாராகியுள்ளது. நல்லதற்கல்ல. இந்த உரசல்களை உலக நாடுகளும், இலங்கை அரசும் உன்னிப்பாக கவனிக்கிறது.

*ஆசிரியர்*

# குடியேற்ற வாசிகளின் குரல் வளையை நெரிக்கும் குடியேற்ற விதிகள்

ஐக்கிய ராச்சியத்தில் சட்ட விரோதமாக தங்கியிருப்பவர்களுக்கு எதிரான குடியேற்றச் சட்ட விதிகள் மிகக் கடுமையாக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு அமைச்சர் திருமதி தெரேசா மே அவர்கள் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து மேன்முறையீடு செய்வதைத் தடுப்பதும் இந்த வகையில் அடங்கும் என்றும், வெளிநாட்டு குற்றவாளிகளை முதலில் நாடு கடத்தி பின்னர் அவர்களுடைய மேன்முறையீடுகளை விசாரிப்பதும் அடங்கும் என்றும் குறிப்பிட்டார்.

தற்காலிக குடிவரவாளர்கள் அதாவது வெளிநாட்டு மாணவர்கள் மருத்துவ சேவைக்கு பணம் செலுத்த வேண்டும் என்பதும், இது சுகாதார சுற்றுலாவைத் தடுக்கும் என்றும் கருதுகிறார்.

இத்துடன் புதிய நடவடிக்கைகளாக சாரதி அனுமதிப் பத்திரங்களிற்கு விண்ணப்பிப்போரது குடிவரவு அந்தஸ்தை பரிசீலனை செய்தல், நாடு கடத்தலுக்கு எதிரான மேன்முறையீட்டு வீதத்தை 17 லிருந்து 4 ற்கு குறைத்தல், ஒரு தடைவ மறுக்கப்பட்ட பிணை விண்ணப்பங்கள் தடுப்பு முகாம்களில் இருப்போர் மீளச் செய்வதை இல்லாதொழித்தல், செலுத்த வேண்டிய தண்டப் பணங்கள், வரிகள் ஆகியவற்றை உள்நாட்டு அலுவலகமே



வசூலித்தல், போலியான திருமணங்கள், இணைந்து வாழ்தல் போன்றவற்றை தடுத்தல், வங்கிக் கணக்குகள் திறப்பதற்கும் தடை விதிக்கப்படவுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த குடிவரவுத் துறை அமைச்சர் மார்க் காபர் இவ்வாறான திருத்தங்கள் குடிவரவாளர்கள் தமக்கு அருகதையற்ற பொதுச் சேவைகளைப் பெறாமல் இருப்பதற்கு வழி வகுக்கும் என்றும் கூறினார்.

அத்துடன் ஆட்களின் வருகையைக் குறைப்பதற்கும் இங்கே இருக்க கூடாதவர்களை அகற்றுவதற்கும் வழிவகுக்கும் என்று தெரிவித்தார்.

மிகத் திறமையான குடிவரவாளர்கள் எங்களது பொருளாதாரத்திற்கும் சமூகத்திற்கும் நல்லவற்றை செய்து, குடிவரவு விதிகளை மதிப்பவர்களை நாங்கள் வரவேற்போம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வேலை கொடுப்போர் எவ்வாறு நேர்முகப் பரீட்சைகளில் ஒவ்வொருவரது குடிவரவு அந்தஸ்து சரி பார்க்கிறார்களோ அதே போல் வீட்டை வாடகைக்கு கொடுப்பவர்களும் சரி பார்க்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

குடியேறுபவர்களின் உரிமைக்கான வலைப்பின்னல் இயக்குனர் டொன் பிலின் இது பற்றி தெரிவிக்கையில் மிகக் குறைந்தளவானவர்கள் இங்கே வருகின்ற பொழுது தங்களுக்கு முன்னரே இருக்கும் நோய்களுடன் வருவதாக இவர்களிற்கு மருத்துவ உதவி மறுப்பது நியாயமற்றது என்றும் குறிப்பிட்டார்.

டாக்டர்ரிச்சட் வோட்ரி BBC வானொலிக்கு அளித்த செவ்வியில் நோயாளிகளிடமிருந்து மருத்துவதற்கான செலவை அறவிடுவது தேசிய புள்ளி விபரவியல் அடிப்படையில் 2012 மார்கழியில் குடிவரவு 176,000 ஆக உயர்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

2009ல் London School of Economic எடுத்த கணக்கீடு 618,000 சட்ட விரோத குடியேற்றவாசிகள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## லிபியா பிரதமர் விடுதலை



கோட்டல் ஒன்றிலிருந்து கடத்தப்பட்ட பிரதமர் அலி சிடான் வியாழக்கிழமை காலை விடுதலை செய்யப்பட்டார்.

## ஐங்கரநேசனுக்கு எதிராக சுரேஸ்



அண்மையில் நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் ஈ. பி. ஆர். எல். எப் கட்சியில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவரும் தகுதி அடிப்படையில் அமைச்சுப் பதவிக்கு பொருத்தமானவருமான ஐங்கர நேசனுக்கு வழங்கப்பட்ட அமைச்சு பதவியை மீளப் பெறுமாறு சுரேஸ் பிரேமச்சந்திரன் கேட்டுள்ளார்.

## ஐரோப்பிய யூனியன் மனித உரிமை விருது மலாலாவிற்கு



பாகிஸ்தான் இளம் பெண்களின், கல்விக்காக குரல் கொடுத்தமைக்காக தலிபான்களால் சுடப்பட்ட மலாலாவிற்கு (வயது 16) ஐரோப்பிய யூனியனின் மனித உரிமை விருது வழங்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 50,000 யூரோ ஆகும்.

## இலங்கை அமைச்சரவை கின்னஸ் சாதனை



சனத் ஜெயசூரிய உட்பட ஒன்பது பேர் பிரதி அமைச்சர்களாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வினால் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்போது இலங்கை அமைச்சரவையில் 68 அமைச்சர்கள் உள்ளதாக கின்னஸ் சாதனை இணையத்தளம் தெரிவித்துள்ளது.

# தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் நுற்றாண்டு விழா 2013

தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நுற்றாண்டு விழா சிறப்பாக மீன்பாடும் திருநாடாம் மட்டக்களப்பில் எதிர்வரும் நொவம்பர் மாதத்தில் இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளதாகக நுற்றாண்டு விழாச் சபை தெரிவித்துள்ளது.

அடிகளாரின் தொண்டின் மகிமையைக் கௌரவிக்கும் முகமாக சிறப்பு நுல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இவ் விழாவை சிறப்புற நடாத்துவதற்கு அன்புள்ளம் கொண்டவர்களிடமிருந்து நிதி உதவியினை எதிர்பார்க்கின்றனர். ஆகையால் தங்களது ஆதரவை வழங்க விரும்புவோர் மட்டக்களப்பு தேசிய சேமிப்பு வங்கியில் பேணப்படும் தமிழ்த்துது தனிநாயகம் அடிகள் நுற்றாண்டு விழாச் சபை என்ற பெயரில் உள்ள கணக்கு இலக்கம் 10021 0365858 ற்கு தங்கள் நன்கொடைகளை அனுப்பி வைத்து ஆதரவு நல்குமாறு விழாச் சபையினர் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றனர்.

தலைவர்: பேராசிரியர் சி.மௌனகுரு, 459 2ம் குறுக்குத்தெரு சின்ன உப்போடை, மட்டக்களப்பு, இலங்கை.



## Syrian Refugees need your support

Please help. Together, we can ensure That people who have already lost so much don't also hope.

Text AID to 27722 to give $10 to World Food Programme.

WFP Supports refugees in Egypt, Iraq, Jordan, Lebanon and Turkey through food assistance and food vouchers. We need to raise around US$30 million A week to keep the whole operation running.

$10.00 donation to World Food programme USA. Charges will appear on your wireless bill, or Deducted from your prepaid balance. All purchases must be authorized by Account holder. Must be 18 years of age or have Parental permission to participate. Message And data Rates May Apply. Text STOP to 27722 to STOP. Text HELP to 27722 for HELP. Full Terms: mGive.org/T.Privacy Policy:mGive.org/P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேனா முனையில்....

# நான்காம் கட்ட போராட்டம் ஆரம்பமாகியுள்ளது

இலங்கையில் இப்போது நான்காம் கட்ட போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. முன்னைய காலங்களில் திருவாளர்கள் ஜீ.ஜீ. பொன்னம்பலம் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், வே.பிரபாகரன் போன்றவர்களின் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்பட்ட

-ஐம்பதுக்கு ஐம்பது

-சமஷ்டி அரசியல்

-தமிழீழம்

என்ற போராட்ட வடிவங்களிலிருந்து மாறுபட்டு தேசியம்-நல்லிணக்கம் என்ற அடிப்படையில் சி.வி.விக்னேஷ்வரனால் அத்திவாரமிடப்பட்டுள்ளது புதிய போராட்டம்.

இலங்கைக்குள் வாழும் மக்கள் இலங்கை அரசியலமைப்பின் கீழான மாகாண சபையைத் தெரிவு செய்துள்ள காரணத்தால் அந்த நாட்டு சட்ட வரைவுக்குள் செயற்பட வேண்டிய நிலையை முன்னாள் பிரதம நீதியரசர் எடுத்திருப்பது வியப்பிற்கோ விசனத்துக்கோ உரியதல்ல.

இது பற்றிய விமர்சனங்களும் உடனடியாக முடிவுக்கு வரவேண்டியவையே.

இந்நிலையில், புலம் பெயர் நாடுகளில் உள்ள ஒரு சிலர் புலத்தில் உள்ள யதார்த்த நிலமை புரியாமல் இன்னமும் "தமிழீழம்" என்ற பேச்சு எடுபடவில்லை என்ற ஆதங்கத்தில் புலம்பித் திரிகின்றனர். 2009ல் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகளின் போது மௌனமாக இருந்த தமிழகத்தின் இரு பிரதான கட்சி தலைமைகளையும், சில வெளிநாட்டு தலைவர்களின் உளறல்களையும் நம்பி இன்னமும் எஞ்சியுள்ள இலங்கை தமிழர்களை இல்லாதொழிக்க முயலும் முயற்சிக்கு உண்மையான தமிழர் உறுதுணையாக இருக்க முடியாது.

'ஒஸ்லோ' பேச்சுவார்த்தைகளில் எப்படி விடுதலைப்புலிகள் இயக்கம் விவேகத்துடன் செயற்பட்டதோ அந்த நிலையில் இன்றும் செயற்பட வேண்டிய தேவை வடமாகாண முதல்வருக்கு ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வசதியாக வாழ்பவர்கள் அங்குள்ள மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க முடியாது என்பதனை உணர வேண்டும்.

அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும். இலங்கை ஜனாதிபதி அவர்கள் வடமாகாண சபை விடயமாக சொல்லியிருக்கும் கருத்துக்கள் ஒரு புதிய நம்பிக்கையை உருவாக்கியுள்ளது.

வடமாகாண மக்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ப ஜனநாயக முறைப்படி தேர்வு செய்துள்ள தலைமையிடம் நாம் பொறுப்பை ஒப்படைத்து அவர்கள் அமைத்துள்ள ஆட்சிக்கு இடையூறு விளைவிக்காமல் இருப்பதே நாம் இலங்கை வாழ் தமிழர்களுக்குச் செய்யும் பாரிய நன்மையாகும்.


## தமிழினி

பிரதம ஆசிரியர்
**தமிழினி குலேந்திரன்**

துணை ஆசிரியர்
**திரு.சிவநித்திலன்**

ஆசிரியர் குழு
**திரு.வவுனியூர் இரா உதயணன்**
**செல்வி மேகலை சிவலிங்கம்**
**திரு.கந்தசாமி மனோகரன்**
**திரு.S.K. குணா**
**திரு.பீற்றர் ஜேசுதாஸ்**
**திரு.ஸ்ரீபதி சிவனடியான்**

பதிப்பாசிரியர்
**திருமதி சறோஜினிதேவி குலேந்திரன்**

ஆலோசகர்கள்
**பேராசிரியர் கோபன் மகாதேவா**
**கலாநிதி பொன் பாலசுந்தரம்**

சட்ட ஆலோசகர்
**பாரிஸ்டர் S.J.ஜோசப்**

ஆன்மீகப் பகுதி
**திரு.செ.யோகராசா**

செய்தி தொடர்பு
**திருமலை பாலா**

விளம்பரம்
**ஸ்ரீ**

வடிவமைப்பு
**சத்யன் லே அவுட், +91 9551395516**

கணினி வடிவமைப்பு
**செல்வி ஜனனி சிவாஜி**
**திருமதி றெஜினா நெல்சன்**

அலுவலக முகவரி
**THAMILINI**
**90, HIGH STREET, COLLIERS WOOD**
**LONDON SW19 2BT**
**தொலைபேசி 044- 2086824494**
**தொலைநகல் 044- 2085428666**
மின்னஞ்சல்: **tkpublish@yahoo.co.uk**





# உதவும் கரங்கள் 2013

## தங்கப் பதக்கம் வெல்வதற்கான போட்டி விபரங்கள்

உதவும் கரங்கள் நிறுவனம் 2013ல் நடாத்தவுள்ள போட்டிகள் மூன்று பிரிவுகளாக எதிர்வரும் 07.12.2013 நடைபெறவுள்ளன.

**இடம்: The Archbishop Lancfranc School, Croydon**

கீழ்ப்பிரிவு - 9 வயதிற்குட்பட்டோர் (31.08.2004 ற்கு பின்னர் பிறந்தவர்கள்)
மத்தியபிரிவு - 14 வயதிற்குட்பட்டோர் (31.08.1999 ற்கு பின்னர் பிறந்தவர்கள்)
மேற்பிரிவு - 18 வயதிற்குட்பட்டோர் (31.08.1996 ற்கு பின்னர் பிறந்தவர்கள்)
மேற்பிரிவு - 18 வயதிற்கு மேற்பட்டோர் (31.08.1995 ற்கு பின்னர் பிறந்தவர்கள்)

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் பாடல் போட்டியில் மட்டும் கலந்து கொண்டு பரிசில்களை வென்று கொள்ளலாம்.

ஆண்களுக்கும் பெண்களுக்குமாக போட்டிகள் இணைந்து நடாத்தப்படும்.

### இசைப் போட்டி

போட்டியாளர்கள் எந்த மொழிப் பாடல்களையும் தெரிவு செய்து அதற்கு ஏற்ப விரும்பினால் நடனங்களை அமைத்து ஆடலாம். அவை 5 நிமிடத்திற்கு மேற்படலாகாது. சினிமாப் பாடல்கள் அல்லது ஈழத்துப் பாடல்கள் விரும்பத்தக்கது.

### பரதநாட்டியப் போட்டி

ஆண்கள், பெண்கள் என பரத நாட்டிய போட்டிக்கு தங்களுக்கு விருப்பமான பாடல்களை தெரிவு செய்து 5 நிமிடங்களிற்கு மேற்படாத வகையில் நிகழ்ச்சியில் பங்கு பற்றலாம். இசைப் பேழை CD இன் இரு பிரதிகள் முன் கூட்டியே தந்து உதவ வேண்டுகின்றோம்.

### பேச்சுப் போட்டி

பேச்சுப் போட்டிக்கான தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 4 நிமிடங்களிற்கு மேற்படாமல் பேச வேண்டும்.

**பேச்சுப் போட்டிக்கான தலைப்புக்கள்**

1) கீழ்ப் பிரிவு
எனது தாய்
எனது தாய் மொழி

2) மத்திய பிரிவு
நான் விரும்பும் பெரியார்
நாமும் எமது புலம் பெயர் வாழ்வும்

3) மேற்ப் பிரிவு
ஊடக சுதந்திரம்
பெண் விடுதலை
தனி மனிதனிற்கு உணவில்லை எனின்.......
தனிநாயகம் அடிகளார்.

விண்ணப்பக் கட்டணமாக £5.00 அறவிடப்படும்.
விண்ணப்பப் படிவங்களுடன் காசோலையை "HELPING HANDS" என்ற பெயருக்கு எழுதி அனுப்பி வைக்க வேண்டும்.

## போட்டி முடிவு திகதி 18.11.2013


விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
**Helping Hands**
**90, High Street Colliers Wood London SW19 2BT**

நடுவர்களின் தீர்வே இறுதியானதாகும்.

போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கும் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் பாராட்டுப் பத்திரமும் பரிசாக வழங்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய அரசுக்கே காணி அதிகாரம்



இலங்கை உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள அதிரடித் தீர்ப்பில் காணி அதிகாரம் மாகாண சபைக்கு அல்ல மத்திய அரசுக்கே உண்டு என்று கூறியுள்ளது.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஸ்ரீபவன், சிவா வனசுந்தரா ஆகியோரே இத் தீர்ப்பை வழங்கினர்.

முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கா தலைமையிலான நீதியரசர்கள் மாகாண சபைகளுக்கு சார்பாக தீர்ப்பை வழங்கியிருந்தனர்.

அத்தீர்ப்பை ஆட்சேபித்து அரசு மேல்முறையீடு செய்த மனு மீதே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

### உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு ஆப்பு!

# குற்றவாளிகளைக் காப்பாற்ற இந்திய மத்திய அரசு பெருமுயற்சி



குற்ற வழக்குகளில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெறும் எம்.பிக்கள், எம்.எல்.ஏக்களின் பதவியை உடனே பறிக்க வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் கடந்த ஜூலை மாதம் 10 ஆம் திகதி தீர்ப்பை வழங்கி பலரைப் பெரும் கலக்கத்தில் உள்ளாக்கியுள்ளது.

இந்த நிலையில், இந்தியா முழுவதும் சுமார் நாலாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பதவியை இழக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். இவர்களைக் காப்பாற்ற காங்கிரஸ் அரசு பெருமுயற்சியில் ஈடுபட்டுள்ளது.

பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பியதும் காங்கிரஸ் உயர்நிலைக் கூட்டம் சோனியா காந்தியின் தலைமையில் கூடி எடுத்த தீர்மானித்தத்தின்படி, உச்ச நீதிமன்றத்தினால் கொண்டுவரப்பட்ட சட்டத்தை வாபஸ் பெறுவதற்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை பிரதமர் சந்தித்து கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்நிலையில் குற்றவாளிகளான அரசியல்வாதிகளைக் காப்பாற்றி அவர்களுக்கான பதவிகளைத் தக்க வைக்கும் முயற்சியில் மத்திய அரசு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8வது பிரிவில் சில மாற்றங்களை மேற்கொண்டு அதன் மூலம் எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் இரண்டு ஆண்டு தண்டனை பெற்றாலும் பதவியில் தொடர்ந்து நீடிக்க வழி கிடைத்துள்ளது.

உண்மையைச் சொல்லப்போனால் இந்தியாவை குற்றவாளிகளே ஆட்சி செய்கிறார்கள். இதுதொடரும் நிலையில் இந்தியாவின் எதிர்காலம் எப்படி அமையும் என்பதை ஊகித்துக்கொள்ளுங்கள்.

## மரண அறிவித்தல்



### திரு. சின்னத்தம்பி நடராசா

**இராமநாதர் சின்னத்தம்பி நடராசா அவர்கள் 29.09.2013 சனிக்கிழமை அன்று இங்கிலாந்தில் காலமானார்.**

அன்னார், காலஞ்சென்ற சின்னத்தம்பி (நீளியார்) வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தையல்முத்து தம்பதிகளின் மருமகனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சுசீந்திரன், கலைச்செல்வி, சுசீஸ்வரன், சோதீஸ்வரன், கலையரசி, இராஜசுசீந்திரன், சுசீஆன்ந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சேதுப்பிள்ளை, காலஞ்சென்ற கதிரவேலு (பொலிஸ்), காலஞ்சென்ற குமாரசாமி, மனோன்மணி (ஓய்வுபெற்ற தாதி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இன்பராணி, சச்சிதானந்தம், தயாரஞ்சினி, நவரஞ்சினி, துறைவன், சுதர்சினி, தாருணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

# கிழக்கு மாகாண சபை முதல்வரை பணியவைத்த 13வது திருத்த சட்டம்

13 ஆவது திருத்த சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை இல்லாதொழிப்பதற்கு தென்னிலங்கை பேரினவாத அரசியல் தலைமைகளினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளை கிழக்கு மாகாண சபை முறியடிக்க வேண்டும் என்று மு.கா. தலைவர் ஜெமீல் பிரேரணையை சமர்ப்பித்து பேசினார். மேலும் அவர் சிறுபான்மையினரின் நலன்களுக்காக ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையை மேலும் பலப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் இதனை ஒழிப்பதற்கோ அல்லது 13ஆவது திருத்த சட்டத்தில் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களை குறைப்பதற்கோ கிழக்கு மாகாண சபை ஒரு போதும் இடமளிக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டார். இதற்கு



முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்; குறித்த பிரேரணைக்கு தனது பலமான எதிர்ப்பை வெளியிட்டார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த சட்ட விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதால் அது குறித்து இப்போது விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

13 ஆவது திருத்த சட்ட விவகாரம் நீதிமன்றத்தில் இருப்பதால் இந்த சபையில் அது பற்றி விவாதிக்க முடியாது என்று தெரிவித்த முதலமைச்சர்; இந்த விவாதத்தை நடத்துவதற்கு தன்னால் அனுமதிக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

இது விடயத்தில் எமக்கு அநீதியிழைக்கப்படுமானால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் ஒன்றிணைந்து புதிய தவிசாளரைத் தெரிவு செய்வோம் என்றும் ஆட்சியை மாற்றியமைப்போம் என்றும் அவர்கள் இருவரும் கடும் தொனியில் எச்சரித்தனர்.

இதனைத் தொடர்ந்து முதலமைச்சரும் தவிசாளரும் குறித்த பிரேரணையை விவாதிப்பதற்கு இணங்கி வந்தனர். பிரேரணையினையடுத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 16 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டது.

அந்த வகையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்கள் இருவர் உட்பட 16 வாக்குகள் பிரேரணைக்கு ஆதரவாகவும் ஒரு வாக்கு எதிராகவும் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான க. துரைராஜசிங்கம், கே.கருணாகரம் உள்ளிட்டோர் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை.




தமிழ் மக்களுக்கு
ஓர் மகிழ்வான செய்தி!

BARRISTER S.J. JOSEPH
பாரிஸ்டர் செ.யோ. யோசேப்

நேரடியாக உங்கள் வழக்குகளை ஆராய்ந்து சொலிசிற்றர் இல்லாமலே நீதிமன்றத்தில் ஆஜராக உரிமை பெற்றுள்ளார். இதுதவிர, Home Office விண்ணப்பங்கள். உயர்நீதிமன்றத்தில் இடைக்காலத் தடைக்கான உத்தரவு பெறல் போன்ற சகலவற்றுக்கும்....

CHAMBERS OF BARRISTER JOSEPH
39, HERMITAGE ROAD, LONDON N4 1LU 020 8809 3083, 07831 594 270

தென் லண்டனில் 90, HIGH STREET
COLLIERS WOOD LONDON SW19 2BT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டும் பதவி கேட்ட சட்டத் தரணிக்கு அபராதம்!

தேசிய அளவிலும், மாநில அளவிலும் செயற்படும் அரசியல் கட்சிகளில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எம்.பி. மற்றும் எம்.எல்.ஏக்களாகப் பதவிகளை வகிக்கின்றார்கள். பரம்பரையாக அரசியல் தலைவர்களின் வாரிசுகள் முக்கிய பதவிகளை வகிக்கின்றார்கள். இது குறித்து இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர், மாநில தேர்தல் அதிகாரி ஆகியோருக்கு முதலில் மனுக் கொடுத்த சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணி பாலசுப்பிரமணியன் தமது வேண்டுகோளுக்கு எதுவித பயனும் கிடைக்காத நிலையில் சென்னை உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளை அவமதிக்கும் வகையில் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று சென்னை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ராஜேஷ்குமார் அகர்வால், நீதிபதி சத்தியநாராயணன் ஆகியோர் கொண்ட நீதிபதிகள் குழு தீர்மானித்து வழக்குத் தொடர்ந்த சட்டத் தரணிக்கு ரூபாய் பத்தாயிரம் அபராதம் விதித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

## ஊழல் நிறைந்த யாழ் மாநகரசபை



யாழ். மாநகரசபை ஈ.பி.டி.பி.யின் ஆதிக்கத்திலேயே இருந்து வந்துள்ளது. அதன் மேயராக இருப்பவர் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா. அவர் ஒரு சர்வாதிகாரியாகவே தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

வட மாகாண சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி. படுதோல்வியைச் சந்தித்திருக்கின்ற வேளையில் மேயர் அம்மையாருக்கு ஞானம் பிறந்துள்ளது. ஈ.பி.டி.பி. தலைமையிலான யாழ் மாநகரசபையின் ஆட்சியானது ஊழல் மோசடிகள் நிறைந்தது என்பதை யாழ் மாநகர சபையின் மதிப்பார்ந்த மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

வட மாகாணசபையை ஆட்சி செய்ய வந்தவர்களால் தமது பதவிக்கும் அதனால் மேற்கொள்ளப்பட்ட ஊழல்களுக்கும் எதிரான நடவடிக்கைகள் கட்டாயமாக மேற்கொள்ளப்படும் என்ற பயத்தினால் அம்மையார் முதலிலேயே ஊழல் மோசடியைப்பற்றிப் பகிரங்கப் படுத்தியுள்ளார்.

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகள்: ஆணைக்குழுத் தலைவர்

காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அவர்களது உறவினர்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே காணாமல் போனவர்கள் தொடர்பில் ஆராய்வதற்கான ஆணைக்குழு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி மெக்ஷ்வல் பரணகம தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை காணாமல் போனவர்கள் தொடர்பில் இந்த ஆணைக்குழு ஆராய்ந்து விசாரணைகளை நடத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு 1990 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டுவரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி தீர்வைப் பெற்றுக் கொடுப்பதே இந்த ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதியினால் வழங்கப்பட்டுள்ள ஆணையாகும். காணாமல் போனவர்கள் தொடர்பில் எங்களுக்கு முதலில் முறைப்பாடுகளை அனுப்புமாறு பொதுமக்களை கேட்டுள்ளோம். இது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல்களை வெளியிட்டுள்ளோம். அக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் முறைப்பாடுகளை எழுத்து மூலம் எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மும்மொழிகளிலும் காணாமல் போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு இலக்கம் 9-8, கரனிமல பிளேஸ், கொழும்பு -06 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். முறைப்பாடுகள் எமது ஆணைக் குழுவுக்கு கிடைத்ததும் அவற்றை ஆராய்ந்து நாங்கள் வகைப்படுத்துவோம். அதன் பின்னர் வாய்மூல விசாரணை அமர்வுகளுக்கு அழைக்கப்பட வேண்டியவர்களுக்கு அமர்வுக்கு வருமாறு அழைப்பு விடுப்போம். ஆறு மாதங்களில் எமது ஆணைக்குழுவின் செய்ற்பாடுகள் தொடர்பில் அறிக்கையை ஜனாதிபதிக்கு வழங்க்வுள்ளோம். அதற்குள் தேவைப்படின் இடைக்கால அறிக்கையையும் கொடுப்போம். கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவானது பரிந்துரைகளை முன்வைத்தது. ஆனால், தற்போது நியமிக்கப்பட்டுள்ள காணாமல் போனவர்கள் குறித்த முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவானது காணாமல் போனவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டும். புலம்பெயர் நாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் காணாமல் போயிருந்தால் அவர்களும் அவைபற்றிய முறைப்பாடுகளை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கலாம்.

### அமெரிக்கப் பொருளாதாரம் சரிந்தது!

# நிதி ஆண்டுக்கான பட்ஜெட் பாராளுமன்றத்தால் நிராகரிப்பு



### ஜனாதிபதி ஒபாமா அதிரடி நடவடிக்கை

பொருளாதாரச் சிக்கல் காரணமாக அமெரிக்காவில் அரசு நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இதனால் ஏழு இலட்சத்து எண்பத்தையாயிரம் பேர் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஒரு மாதச் சம்பளம் வழங்கி அவர்களை வீட்டுக்கு அனுப்பியுள்ளது. அதேவேளை அத்தியாவசிய சேவைகளான சுகாதாரம், ராணுவம் மற்றும் பாதுகாப்புத் துறையினருக்கு மட்டும் இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தால் நிராகரிக்கப் பட்டதனால், நிதிச் செலவினம் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அரச நிறுவனங்களை மூட ஒபாமா அரசு முடிவு செய்துள்ளது. அதன் முதல் கட்டம் அரச ஊழியர்கள் சம்பளமற்ற விடுமுறையில் செல்ல உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள் மூடப்படுவதால் வாரத்துக்கு சுமார் 1000 டொலர் இழப்பு ஏற்படுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இதுபோன்ற பொருளாதாரப் பின்னடைவு 17 ஆண்டுகளுக்கு முன் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

புதிய வரவு - செலவுத் திட்டத்திற்கு அமெரிக்கப் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஒப்புதல் கொடுக்கத் தவறியதை அடுத்து அரச நிறுவனங்களை மூடும் நிலைக்கு அமெரிக்க நிர்வாகம் முன்வந்துள்ளது. பராக் ஒபாமா தமது சுகாதாரச் சட்டத்தைப் பிற்போடாதவரை புதிய வரவு-செலவுத் திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கமுடியாது எனக் குடியரசுக் கட்சியினர் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்க அரசாங்க நிறுவனங்கள் மூடப்படுவதை முடிவுக்கு கொண்டு வருவதற்கு குடியரசுக் கட்சியினர் கப்பம் கோருவது பராக் ஒபாமா சுட்டிக்காட்டியுள்ளார். பழைமைவாதிகளான குடியரசுக் கட்சியினரே அரச நிறுவனங்கள் மூடப்பட்டமைக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.


அமெரிக்காவின் அதிபராக இரண்டாவது முறையும் தெரிவு செய்யப்பட்ட பராக் ஒபாமா பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள இந்த நிலைக்காக எனது பதவியைத் துறக்க மாட்டேன் என்று தெரிவித்தவர், நாட்டில் ஏற்பட்டுள்ள இச்சம்பவத்துக்காக யாருடனும் பேச்சுவார்த்தைக்கு உடன்படமாட்டேன் என்று கூறிவந்தவர் தற்பொழுது அமெரிக்க குடியரசுக் கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்தச் சம்மதத்தைத் தெரிவித்துள்ளதாக அறிய வந்துள்ளது.

உலக வல்லரசான அமெரிக்கா முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இருப்பதாலேயே மிகப்பெரியளவிலான பொருளாதாரப் பின்னடைவைக் கண்டு வருகின்றது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். முதலாளித்துவ கட்டமைப்பால் சாதாரண தொழிலாளர்கள் சுரண்டப்பட்டு, வேலை இழந்து பரிதாபமாக நிற்கும் நிலை அமெரிக்காவில் ஏற்பட்டுள்ளது.

### ஊழல் வழக்கின் தீர்ப்பு

## காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ரஷீத் மசூத்துக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை

### பதவியும் பறிபோகிறது




1990 ஆம் ஆண்டு வி.பி.சிங் தலைமையிலான மத்திய மந்திரி சபையில் சுகாதாரத் துறை இணை மந்திரியாக இருந்த ரஷீத் மசூத், திரிபுரா மருத்துவக் கல்லூரிக்கான அகில இந்திய ஒதுக்கீட்டில் மோசடி செய்தமையை அடுத்து சி.பி.ஐ. அவர் மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் மீது வழக்குப் பதிவு செய்தது.

அத்தோடு இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரகாரம் சதி, ஏமாற்றுதல், மோசடி ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, கடந்த மாதம் 19 ஆம் திகதி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் ரஷீத் மசூத் குற்றவாளி என்று அறிவித்து சிறைக்கு அனுப்பியுள்ளது. குற்ற வழக்கில் தண்டனை பெறும் முதல் அரசியல்வாதி என்ற பெயருக்கு உரியவராகிறார்.

காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற மேற்சபை உறுப்பினராகப் பதவி வகிக்கும் ரஷீத் மசூத்தின் பதவியை, ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளானவர்களைக் காப்பாற்றத் துணிந்துள்ள காங்கிரஸ் மேலிடம் அக்கறை கொள்ளுமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீகார் சிங்கம் லாலு பிரசாத் யாதவுக்குச் சிறை



மாட்டுத் தீவன ஊழல் வழக்கில் லாலு பிரசாத் யாதவுக்கு ஐந்து ஆண்டுச் சிறையும் ரூபாய் 25 இலட்சம் அபராதமும் நீதிமன்றம் வழங்கித் தீர்ப்பளித்துள்ளது. பீகார் மாநிலத்தில் லாலு பிரசாத் யாதவ் முதலமைச்சராக இருந்தபோது ரூ.950 கோடிக்கு கால்நடை தீவன ஊழல் நடந்துள்ளது. சி.பி.ஐ. லாலு பிரசாத் மீது ஆறு வழக்குகளைப் பதிவு செய்து விசாரணை நடத்தியது.

17 ஆண்டு காலமாக நடைபெற்ற இந்த ஊழல் வழக்கில் முன்னாள் முதலமைச்சர்கள் லாலு பிரசாத் யாதவ், ஜெகந்நாத் மிஸ்ரா, ஜெகதீஸ் சர்மா எம்.பி. உட்பட 42 பேர் குற்றவாளிகள் என ராஞ்சி சிறப்பு சி.பி.ஐ. நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

இந்தவழக்கில் ஆஜராகிவாதிட்ட சி.பி.ஐ. சட்டத்தரணி "குற்றம் ஆதாரங்களுடன் நிருபிக்கப்பட்டுள்ளது. இந்த ஊழலே மற்ற ஊழல்கள் எல்லாவற்றுக்கும் சிகரமாக உள்ளது. இதில் பல வி.ஐ.பிக்கள் தொடர்புகொண்டுள்ளனர். அவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை மற்றவர்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். எனவே லாலு பிரசாத்துக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

லாலு மீது ஊழல், கிரிமினல் சதி, மோசடி ஆகிய குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நீதிபதி பி.கே. சிங் கூறி தமது தீர்ப்பை வெளியிட்டுள்ளார். இதன் காரணமாக உயர் நீதிமன்ற உத்தரவுக்கு ஏற்ப அவரது எம்.பி. பதவியும் உடனடியாக பறிக்கப்பட்டுள்ளது.

மிகப் பெரிய ஜனநாயக நாட்டில் ஊழல்களும், வழக்குகளும், அதிரடித் தீர்ப்புகளும் பிரபல்யம் பெற்றிருக்கின்ற காலகட்டத்தில் அரசியவாதிகள் சிறைத் தண்டனை பெற்றுள்ளார்கள். என்று தணியும் இந்த ஊழலின் மோகம்?

# மேற்குலகக் கல்வியை எதிர்த்து நைஜீரியாவில் தீவிரவாதிகள் தாக்குதல்

## 50 மாணவர்கள் பலி

நைஜீரியாவில் கல்லூரியொன்றுக்குள் புகுந்து தீவிரவாதிகள் நடாத்திய தாக்குதலில் 50 மாணவர்கள் வரை உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியாவின் யோப் மாகாணத்தில் குஜ்பா நகரில் அமைந்துள்ள விவசாயக் கல்லூரி விடுதியில் நள்ளிரவில் மாணவர்கள் தூங்கிக் கொண்டிருந்த வேளையில் போகோ கராம் தீவிரவாதிகள் கும்பலாக திடீரென்று புகுந்தனர்.

ஒவ்வொரு அறையாக புகுந்து சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு தப்பி ஓடிய மாணவர்களையும் இரக்கமின்றி சுட்டுத் தள்ளினர். வகுப்பறைகளுக்கு தீ மூட்டியதில் 50 மாணவர்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

கல்லூரியில் படித்த சுமார் 1000 மாணவர்கள் தப்பி ஓடிவிட்டதாக கல்லூரி நிர்வாகி தெரிவித்துள்ளார்.

மேற்குலகக் கல்வியை முஸ்லீம் மாணவர்கள் தொடரக் கூடாது என்ற காரணத்தினாலேயே இந்த துப்பாக்கி சூடு நடாத்தப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

# சம்பந்தன் விடுத்த பதவிப் பிரமாணம் சம்பந்தமான அறிக்கை

வட மாகாண முதலமைச்சர் CV விக்னேஸ்வரன் ஜனாதிபதி முன்னால் பதவி ஏற்பது தொடர்பாக இலங்கை தமிழரசுக்கட்சி தலைவர் விடுத்த அறிக்கை:



This decision is in consonance with the commitment of the Tamil National Alliance to ensure that the Tamil People are able to live in security, safeguarding their self respect and dignity, fulfilling their legitimate political, economic, social and cultural aspiration within the framework of a united and undivided country, as overwhelmingly demonstrated in their electoral verdict. The Tamil National Alliance expresses the wish that the Government of Sri Lanka would meaningfully reciprocate this positive step on the Part of the Tamil National Alliance.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையில் பத்திரமாக இருந்து கொண்டு திரு. விக்னேஸ்வரனை வசை பாடுவது அயோக்கியத்தனம்!

நக்கீரன்





நுணல் என்பது ஒருவகைத் தவளை. வயல் வெளிகளில், தவளைகள் வழக்கமாகக் கால்வாய்களில் ஓடும். சிறிய வாய்களைக் கொண்ட குழிகளில், ஓட்டைகளில், பள்ளங்களில் அந்தத் தவளைகள் ஓடி ஒளிந்து கொள்ளும். பாம்புகள் இரை தேடி அங்கே வரும். தவளைகள் என்றால் பாம்புகளுக்கு நல்ல விருப்பம். நுணல் என்ற தவளை வகை "குவா, குவா" என்று கத்தும். அப்படிக் கத்தும்போது, இரவில் இரை தேடி வரும் பாம்புகளுக்கு அவை இருக்கும் இடம் தெரிந்து விடும். அதனால் அந்த நுணல்கள் மாட்டிக்கொள்ளும். பாம்புகள் அவற்றை விழுங்கி விடும். இதுதான் "நுணலும் தன் வாயால் கெடும்" என்ற பழமொழி பிறப்பதற்குக் காரணமாக இருந்தது.

கவிஞர் காசி ஆனந்தன் அவர்கட்கு என்ன நடந்ததோ தெரியாது. வாகை தொலைக்காட்சியில் (Vaakai TV -September 24, 2013) பேசும்போது முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் மீது ஆவேசத்தோடு கடுமையாகப் பாய்ந்து பிராண்டியிருக்கிறார். அநாகரிகமான முறையில் வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்திருக்கிறார். மக்கள் செருப்பால் அடிப்பார்கள் என்று சாபம் போடுகிறார்.

நாகாக்க வேண்டிய கவிஞர் நாலாந்தர அரசியல் வாதி மாதிரி நாக்கில் நரம்பில்லாமல் "நேற்று கொழும்பில் முளைத்து இன்று யாழ்ப்பாணத்தில் தளைவிட்ட விக்னேஸ்வரன் அவருக்கு எந்த உரிமையும் கிடையாது. நீதியே இல்லாத தேசத்தில் நீதிபதியாக இருந்தவர் வாயடிக்கின்றார்............" என அர்ச்சனை செய்திருக்கிறார்.

திரு.விக்னேஸ்வரனது அகவை, கல்வி, பட்டறிவு ஆகியவற்றுக்கு ஒரு எள்முனை அளவு கூட மரியாதை கொடுக்காது கனி இருக்கக் காய் கவர்ந்தற்று என்பது போல அவரை ஒருமையில் விளித்து வசை பாடியுள்ளார்.

ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்பார்கள். கவிஞர் காசி ஆனந்தனைப் பொறுத்தளவில் அது சரியாக இருக்கிறது. அது மட்டுமல்ல, உணர்ச்சி உள்ள இடத்தில் அறிவு இருக்காது என்பார்கள். அவரைப் பற்றி இப்படி எழுதுவது எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. ஆனால் எழுத வேண்டியுள்ளது.

கவிஞர் காசி ஆனந்தனை எனக்கு நீண்ட காலமாகத் தெரியும். அவர் எனது நண்பர். அவரை முதன் முதலில் 1960 ஆம் ஆண்டு சென்னையில் சந்தித்தேன். அப்போது அவர் பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். ஒரு சிறிய வாடகை அறையில் நண்பர்களோடு இருந்தார். பார்ப்பதற்கு மிகவும் ஒல்லியாக இருந்தார். பின்னால்தான் அவர் உடல்நலக் குறைவால் நலிந்து இருந்தது பற்றி அறிந்து கொண்டேன்.

கவிஞர் காசி ஆனந்தன் வெலிக்கடை சிறையில் இருந்த காலத்தில் அவரைப் பார்க்க அவரது இளவல் சிவஜெயம் மட்டக்களப்பில் இருந்து மாதம் இருமுறையாவது கொழும்புக்கு வருவார். கல்குடா நா.உறுப்பினர் கொடுத்த தொடர்வண்டி அனுமதிச் சீட்டைப் பயன்படுத்தித்தான் அவர் பயணிப்பார். எங்கள் வீட்டில்தான் தங்குவார். வரும்போது சும்மா வரமாட்டார். கவிஞரின் தாயார் தனது அருமை மகனுக்குச் செய்து கொடுத்த பலகாரப் பொட்டலத்தோடுதான் வருவார். அது குசேலர் கிருஷ்ண பரமாத்மாவைப் பார்க்கப் போகும்போது அவல் பொட்டலம் கொண்டு போன கதையை நினைவுபடுத்தும்.



சிவஜெயம் மறுநாள் காலையில் தமையனாரைப் பார்க்கச் சிறைச்சாலைக்குப் புறப்படும்போது நாங்களும் உணவு கொடுத்து விடுவோம். அப்போது கவிஞரோடு குட்டிமணி, தங்கத்துரை, இன்பம், மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன் என மொத்தம் சுமார் 42 இளைஞர்கள் சிறையில் இருந்தார்கள்.

பின்னர் சிவஜெயமும் அரசியல் நடவடிக்கைகள் காரணமாகப் பிடிபட்டு சிறையில் அடைக்கப்பட்டார். விடுதலையானதும் இயக்கத்தில் சேர்ந்து போராளியானார். 1988 இல் இராணுவம் மேற்கொண்ட ஒருசுற்றிவளைப்பில் சிக்குண்டபோது நஞ்சருந்தி வீரச் சாவைத் தழுவிக்கொண்டார்.

கவிஞர் 1977 இல் விடுதலை ஆனதும் எனது வீட்டுக்கு வந்தார். அவருடன் இன்பம், வண்ணை ஆனந்தன் என நான்கு இளைஞர்கள் வந்தார்கள். கவிஞர் சிறை வாழ்க்கைபற்றிச் சொன்ன பல விடயங்களில் ஒன்று நினைவிருக்கிறது. சிறையில் கொடுக்கும் உணவு படுமோசமானது. சோற்றில் கற்கள் அதிகம். அதனால் அதனைச் சாப்பிடுவதற்கு முன்னர் தட்டில் தண்ணீர் ஊற்றுவார்கள். அப்போது மேலே இருக்கும் கற்கள் கீழே போய்விடும். ஆனால் கீழே இருந்த புழுக்கள் தண்ணீரில் மேலே மிதக்கத் தொடங்கிவிடும்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான காலப்பகுதியில் பேச்சுக்களுக்காக விடுதலைப்புலிகள் இந்தியா சென்றபோது காசி ஆனந்தன் இந்தியா சென்றார். விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக்குழுவின் மத்திய குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்காலப்பகுதியில் இந்தியாவில் இராஜீவ் அரசுடனான பேச்சுக்குழுவில் விடுதலைப்புலிகள் தரப்பு சார்பாளர்களில் ஒருவராக காசி ஆனந்தன் சென்றார்.

உயிரோடு இருக்கும்போதே மாமனிதர் விருது பெற்ற ஒரு சிலரில் கவிஞர் காசி ஆனந்தனும் ஒருவர். ஈழப்போராட்ட காலத்தின் இக்கட்டான காலப்பகுதிகளில் தோளோடு தோள் நின்ற இவருக்கு தமிழீழத்தின் அதிஉயர் விருதான மாமனிதர் விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார். தமிழகத்திலேயே தங்கிவிட்ட காசி ஆனந்தன் இன்றும் ஈழத்தமிழருக்கு ஆதரவாக அங்கு குரல் கொடுத்த வண்ணம் உள்ளார்.

கவிஞர் காசி ஆனந்தன் பற்றி நான் பேசும் போதும் சரி, எழுதும் போதும் சரி அவரைத் தமிழீழ அரசவைக் கவிஞர் என்று விளிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களையும் அவ்வாறே விளிப்பது வழக்கம்.

இந்திய தேச விடுதலைக்கு எப்படி மகாகவி பாரதியாரின் கவிதைகள் வாளாகவும் வேலாகவும் பயன்பட்டதோ அது போல இந்த இரண்டு கவிஞர்களின் கவிதைகள் தமிழீழ விடுதலைக்குப் பயன்பட்டன.

இந்த வரலாற்றை மீள்வாசிப்புச் செய்வதற்குக் காரணம் கவிஞர் காசி ஆனந்தன் மீது நான் நேற்றுவரை வைத்திருந்த மதிப்பை எடுத்துக்காட்டவே. அந்த மதிப்பு இப்போது ஆட்டங்கண்டுள்ளது. எனக்குமட்டுமல்ல அவரை நேசிக்கும் பலரும் அதே மனநிலையில்தான் காணப்படுகிறார்கள்.

இப்போது 'முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பேச்சு படு அயோக்கியத்தனமானது, தமிழீழத்தை கைவிட்டுவிட்டோம் என்று சொல்கின்ற யோக்கிய அருகதை தகுதி தமிழ் உலகத்தில் எவனுக்கும் கிடையாது, நேற்று கொழும்பில் முளைத்து இன்று யாழ்ப்பாணத்தில் தளைவிட்டவர் விக்னேஸ்வரன். இவருக்கு எந்த உரிமையும் கிடையாது. நீதியே இல்லாத தேசத்தில் நீதிபதியாக இருந்தவர் வாயடிக்கின்றார்' என வாகை தொலைக்காட்சியில் (வாய்க்குவந்தபடி, மனம் போனபடி) கவிஞர் காசி ஆனந்தன் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனை வசை பாடியுள்ளார். இப்போது அவரால் வீசப்படும் வசைகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

**கேள்வி [1]** தமிழீழத்தை கைவிட்டுவிட்டோம் என்று சொல்கின்ற யோக்கியதை, அருகதை தகுதி தமிழ் உலகத்தில் எவனுக்கும் கிடையாது.

**பதில்:** 'தமிழீழத்தை கைவிட்டுவிட்டோம்' எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் அறிக்கையில் சொல்லவில்லை. அப்படி வேறு யாரும் சொல்லவில்லை. குறிப்பாக முன்னாள் நீதியரசர் சொல்லவில்லை. பின் எதற்காக சாம்பிராணி காட்டாமலே காசி ஆனந்தன் சன்னதம் ஆடுகிறார்?



**கேள்வி [2]** நேற்று கொழும்பில் முளைத்து இன்று யாழ்ப்பாணத்தில் தளைவிட்ட விக்னேஸ்வரன் இவருக்கு எந்த உரிமையும் கிடையாது. நீதியே இல்லாத தேசத்தில் நீதிபதியாக இருந்தவர் வாயடிக்கின்றார். வடமாகாண தேர்தல் முடிந்து அங்கே விக்னேஸ்வரன் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனைப் பெரிதாக ஊடகர்கள் அலசி ஆய்ந்து கொண்டிருக்கின்றார்கள். அங்கிருந்து கொண்டு தமிழர்களின் விடுதலை உணர்வினை மழுங்கடிக்கும் முயற்சியினை நாலுபக்கத்திலும் நஞ்சர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

**பதில்:** இந்த முளை, தளை போன்ற எதுகை பாடலுக்கு உதவலாம். ஆனால் யதார்த்த அரசியலுக்கு உதவாது. கொழும்பில் முளைத்து இன்று யாழ்ப்பாணத்தில் தளைவிட்டவர் விக்னேஸ்வரன் என்பது சரியானால் மலேசியாவில் பிறந்து கொழும்பில் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக வாழ்ந்த தந்தை செல்வநாயகம் அவர்களும் கொழும்பில்தான் முளை விட்டவர். காங்கேசன்துறையில்தான் தளைவிட்டார். கடைசிவரை அவர் கொழும்பில் ஒரு வாடகை வீட்டில் வாழ்ந்தார் என்பது வேறு கதை. கொழும்பில் முளைவிட்டு யாழ்ப்பாணத்தில் தளைவிட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். விடுதலைப் புலிகளால் மாமனிதர் விருது கொடுக்கப்பட்ட குமார் பொன்னம்பலம் அவர்கள் கொழும்பில் பிறந்து வளர்ந்தவர். அவரது மகன் கஜேந்திரகுமார் அவர்களும் கொழும்பில் பிறந்து வளர்ந்தவர்தான். பின் எதற்காக முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு ஒரு நீதி மற்றவர்களுக்கு இன்னொரு நீதி பேசுகிறீர்கள்?

விக்னேஸ்வரன் நாட்டை விட்டு வெளியேறாமல் அங்கேயே வாழ்கிறார். ஆனால் கவிஞரோ தமிழ்நாட்டில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்கிறார். அவர் அங்கு போவதற்குத் தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் இருந்தது. ஆனால் நாடு திரும்பாமல் இருப்பதற்கு என்ன காரணம்? ‘மாங்குயிலும் மரக் கொத்தியும் கூடு திரும்பத் தடையில்லை நாங்கள் மட்டும் வீடு திரும்ப வழியில்லை’ என்று கவிஞர் பாடல் புனைந்ததைப் பார்த்துவிட்டுத் தலைவர் பிரபாகரனே “கவிஞர் நாடு திரும்ப நினைக்கிறார்” என எண்ணினாராம். ஆனால் கவிஞர் நாடு திரும்பவில்லை.



**கேள்வி (3)** இந்தத் தேர்தல் மகிந்த அரசிற்குப் பெரிதும் உதவி புரிந்திருக்கின்றது. மகிந்தவின் அரசு ஒருநேர்மையான அரசு, ஜனநாயகத்தை மதிக்கிற அரசு. ஆகவே அந்த ஜனநாயகவாதியான மகிந்த போற்றுதற்குரியவர் என்று அய்.நா மன்ற ஆணைக்குழு அவர்மீது கொடுமையான சுர்வதிகாரி என்ற குற்றச்சாட்டை சுமத்தியிருக்கின்ற நேரத்தில் அவரை ஒரு. ஜனநாயகவாதியாக காட்டுகின்ற நாடகத்திற்கு இந்த மாகாணசபை பயன்பட்டிருக்கின்றது.

**பதில்:** ‘அய்.நா மன்ற ஆணைக்குழு அவர்மீது கொடுமையான சர்வதிகாரி என்ற குற்றச்சாட்டை சுமத்தியிருக்கின்ற நேரத்தில்....’ என்று கவிஞருக்கு யார் சொன்னது? இது யாரும் கேள்விப்படாத செய்தி? அப்படி எங்கே? எப்போது? குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது என்று அவர் சொன்னால் புண்ணியமாக இருக்கும்.

**கேள்வி (4)** இன்னொன்று இந்த மாகாண சபையினைத் தமிழீழ மக்கள் வடக்கு மக்கள் ஆதரித்திருக்கின்றார்கள். தமிழர் கூட்டமைப்பினை ஏன் ஆதரித்தார்கள் என்றால் அந்த கூட்டமைப்பினை எதிர்த்து நின்ற சிங்கள ஆட்சியாளர்கள் படுதோல்வி அடையவேண்டும் என்ற நோக்கோடுதான் மக்கள் இந்த வாக்கினை அளித்திருக்கின்றார்கள்.

**பதில்:** இது இமாலயக் கண்டுபிடிப்பு. நோபல் பரிசே கொடுக்கலாம். இது ததேகூ வாக்களித்த *3,53,595* வாக்காளர்களை அவமதிக்கும் அயோக்கியத்தனம். அவர்களை அறிவிலிகள், ஒன்றும் தெரியாத அப்பாவிகள் எனக் கவிஞர் நினைக்கிறார். இன்னொரு வாதத்தையும் அவர் முன்வைத்திருக்கலாம். தேர்தலில் *67.52* விழுக்காடு மக்கள் மட்டுமே வாக்களித்தார்கள். ஆகவே *32.48* விழுக்காடு மக்கள் தேர்தலைப் புறக்கணித்திருக்கிறார்கள் என்றும் அவர் வாதிட்டிருக்கலாம்!

**கேள்வி (5)** விக்னேஸ்வரன் போன்றவர்கள் சமஷ்டிதான் எங்கள் கொள்கை என்று சொல்கிறார்கள். அந்த சமஷ்டிக்காக வடமாகாண மக்கள் வாக்களிக்கவில்லை என்பதை விக்னேஸ்வரன் புரிந்து கொள்ளவேண்டும். தமிழீழத்திற்காகப் போராடிய மக்களை ஒடுக்கி அடக்கிவிட்டதாக நினைத்த மகிந்த அரசினைத் தோற்கடித்து தமிழீழத்தின் மீது தமிழீழ மக்கள் உறுதியாக நிற்கின்றார்கள் என்பதற்காகவே கூட்டமைப்பிற்கு மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள்.

**பதில்:** இது நல்ல கற்பனை வாதம். தமிழீழம் என்ற சொல்லை யாரும் சொன்னது கிடையாது. ததேகூ இன் அறிக்கையில் அது குறிப்பிடப்படவில்லை. மீண்டும் மீண்டும் கவிஞர் தமிழ்மக்களின் அரசியல் அறிவாற்றலைக் கொச்சைப்படுத்துகிறார். ‘சமஷ்டிக்காக வடமாகாண மக்கள் வாக்களிக்கவில்லை என்பதை விக்னேஸ்வரன் புரிந்துகொள்ளவேண்டும்’ என்றால் பின் எதற்காக அவர்கள் வாக்களித்தார்கள்? ததேகூ இன் தேர்தல் அறிக்கை மிகத் தெளிவாக குறிப்பிடுகிறது:

‘தமிழ் மக்கள் ஒரு தனிச்சிறப்பு மிக்க தேசிய இனமாகும். புவியியல் ரீதியாக பிணைக்கப்பட்டுள்ளதும் தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மை யினராகக் கொண்டதுமான வடக்கு, கிழக்கு மாகாணங்களே தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடமாகும். தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். தமிழ்ப்பேசும் முஸ்லிம் மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் சமஷ்டிக் கட்டமைப் பொன்றை அடிப்படையாகக் கொண்டு இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் எனும் ஓர் அலகிலான அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் நிறுவப்பட வேண்டும்.’ முதலில் கவிஞர் ததேகூ இன் தேர்தல் அறிக்கையை ஊன்றிப் படிக்க வேண்டும்.

**கேள்வி (6) -** கூட்டமைப்பு ஒருவகையில் சிறுஅளவு பயன்பட்டிருக்கின்றது. அது என்னவென்றால் அந்த மண்ணில் சிங்கள ஆட்சியாளர்களும் அவர்களின் கைகூலிகளும் அந்த மாகாணசபையில் உட்காராமல் தடுத்திருக்கின்றது. அது ஒன்றைத்தான் இந்த மாகாணசபை செய்திருக்கின்றது. மாகாணசபை பயனுள்ளதா இல்லையா என்றால் முழுமையாக பயனற்றது. ஆனால் உலகத்தின் பார்வையில் தமிழீழத்தின் ஒருபகுதியினை ஒருமாகாண சபையாக வருகின்றபோது அது சிங்களவன் கையில் இல்லை என்பதைக் காட்டப் பயன்பட்டிருக்கின்றது.


**பதில்:** ஆகா, இந்தக் கண்டுபிடிப்புக்கு நோபல் பரிசு கொடுக்கலாம்!


**கேள்வி (7)** வெற்றிக்களிப்பில் விக்னேஸ்வரன் போன்றவர்கள் பேசுகின்ற பேச்சு அயோக்கியத்தனமான பேச்சு. நாங்கள் தமிழீழத்தைக் கைவிட்டுவிட்டோம் என்று அவர் சொல்கின்றார். அவர் எந்த தமிழீழத்தை கைவிட்டோம் என்று சொல்கின்றார்? *1976*ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் தந்தைசெல்வா தீர்மானம் இயற்றி நிறைவேற்றிய, *27*ஆண்டுகளாக சமஷ்டி கேட்டு சிங்களவனோடு இணைந்து சமஷ்டி பெறமுடியாது என்று உறுதியாக நம்பிய தந்தைசெல்வா அதே ஆண்டு வட்டுக்கோட்டையில் நிறைவேற்றிய தமிழீழ தீர்மானத்தை எதிர்த்து, தமிழீழ தீர்மானத்தை கைவிட்டுவிட்டோம் என்று சொல்கிறார்.

அந்த தமிழீழ தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விட்டுப் பொது தேர்தலில் வாக்களித்து அதை வெற்றிபெற செய்தார்களே அந்த வெற்றிபெற செய்த தமிழீழத்தை கைவிட்டு விட்டோம் என்று சொல்கிறார்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்று காலம் முழுவதும் சொல்லி வந்த எங்கள் அரும்பெரும் தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்







தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் கொண்டிருந்த அந்த ஈடிணையற்ற கொள்கை தமிழீழம். அதனை கைவிட்டுவிட்டோம் என்று சொல்கிறார்.

எந்த தமிழீழத்திற்காக *40* ஆயிரம் வீரவிடுதலைப் புலிகள் தங்கள் உயிரைக் கொடுத்து மாவீரர்களாகிப் போனார்களோ அந்தத் தமிழீழத்தைக் கைவிட்டு விட்டோம் என்று சொல்கிறார். மூன்று இலட்சம் மக்கள் செத்து மடிந்தார்களே இதுவரை, அந்த தமிழீழத்தை கைவிட்டு விட்டோம் என்று சொல்கிறார்.

**பதில்:** மேலே குறிப்பிட்டதுபோல தமிழீழத்தைக் கைவிட்டு விட்டோம் என்று யாரும் சொல்லவில்லை. சொல்லாததைச் சொன்னதாகச் சொல்லி கவிஞர் மல்லுக்கு நிற்கிறார். தமிழீழத்தை தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களே கைவிட்டவர். ஒரு இடைக்காலத் தீர்வுக்காகக் கைவிட்டவர். நோர்வே நாட்டின் அனுசரணையுடன் நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தை ஒஸ்லோவில் நடந்தது. அப்போது சிறிலங்காவும் வி.புலிகளும் நொவெம்பர் *25, 2002* அன்று எழுதப்பட்ட பிரகடனத்தில் அமெரிக்கா, நோர்வே, யப்பான் மற்றும் அய்க்கிய இராச்சியம் போன்ற நாடுகளின் சார்பாளர்கள் முன்னிலையில் கையெழுத்திட்டார்கள்.

அதில் “ஒன்றுபட்ட ஓர் இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ளக சுய நிர்ணய உரிமை எனும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த தீர்வொன்றை ஆராய்தல் பற்றி இணக்கம் காணப்பட்டது. (The OSLO declaration of 25th Nov 2002 between Sri Lanka of Govt and LTTE signed in the presence of representatives of USA, Norway, UK and Japan clearly stated that: The parties have agreed to explore a political solution founded on the principle of Internal self-determination in areas of historical habitation of Tamil speaking people based on a federal structure within the united Sri Lanka .)

மேலும் ஒக்தோபர் *2003* இல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் முகமாக இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவை வி.புலிகள் முன் வைத்தார்கள், இந்த முன்மொழிவு வி.புலிகளால் சுதந்திர தமிழீழக் கோரிக்கைக்குப் பதிலாக முன்வைக்கப்பட்டது. (The Interim Self Governing Authority was a proposal issued on October 2003 by the rebel Liberation Tigers of Tamil Eelam (LTTE) of Sri Lanka for power sharing in the north and east of Sri Lanka. The proposals were made in-lieu of the LTTE renouncing its claim for an independent country called Tamil Eelam for the minority Sri Lankan Tamil people.)

இதிலிருந்து வி.புலிகள் சுதந்திர தமிழீழத்துக்குப் பதிலாக அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுவதற்கு ஒரு விட்டுக்கொடுப்பைச் செய்தார்கள் என்பது துலாம்பரமாகத் தெரிகிறது.

எனது கேள்வி என்னவென்றால் அப்போது கவிஞர் என்ன வெள்ளியா பார்த்துக் கொண்டிருந்தார்? தமிழீழத்தைக் கைவிட்ட தலைவர் பிரபாகரனை கவிஞர் காய்ந்தார் என எந்தச் செய்தியும் இல்லை. அவரை அயோக்கியன் என்று அர்ச்சித்ததும் கிடையாது. பிறகு எதற்கு விக்னேஸ்வரன் மீது மட்டும் இந்த நாலுகால் பாய்ச்சல்? மாமியார் உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தால் பொன்குடமா? இது தொடர்பாக ‘சம்பந்தன் மட்டுமல்ல விடுதலைப்புலிகளும் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டிருந்தனர்’ என்ற தலைப்பில் ஊடகவியலாளர் திரு.துரைரத்தினம் எழுதிய கட்டுரையை http://www.thinakkathir.com/?p=52750 என்ற இணையதள முகவரியில் படிக்கவும்.

**கேள்வி (8)** அவருடைய சொற்பொழிவு தமிழீழ மக்களின் அடிநெஞ்சில் நெருப்பு வைக்கின்றது. தமிழீழ மக்களின் உணர்வு பற்றி எரிகிறது. அவர் மறந்து விடக்கூடாது. அவர் தெளிவாகச் சொல்லவேண்டும். ஒன்றுபட்ட இலங்கைக்குள் நாங்கள் சிக்கலைத் தீர்ப்போம் என்று சொல்கிறார். சிங்கள சிறீலங்காவின் சட்டதிட்டங்களுக்கு அமைய எங்களின் போராட்டங்கள் அமையும் என்கிறார். நான் இவரைப் பார்த்துக் கேட்கிறேன்? போராட உங்களால் முடியுமா? காந்தியடிகள் பிரிட்டிஷ்காரனின் சட்டதிட்டங்களுக்கு அமையத்தான் இந்தியாவில் அறப் போராட்டங்கள் நடத்தினார். இது உங்களால் முடியுமா?

**பதில்:** இதென்ன குழந்தைத்தனமான கேள்வி? அதுவும் தமிழ்நாட்டில் தனது வாழ்க்கையின் செம்பாதியை கழித்துவிட்ட கவிஞருக்கு இந்தக் கேள்வியைக் கேட்க என்ன அருகதை இருக்கிறது? என்ன யோக்கியதை இருக்கிறது? காந்தியடிகள் பிரிட்டிஷ்காரனின் சட்டதிட்டங்களுக்கு அமைய இந்தியாவில் அறப் போராட்டங்கள் நடத்தினது போல விக்னேஸ்வரனும் சிறீலங்காவின் சட்டதிட்டங்களுக்கு அமையப் போராட்டங்கள் அமையும் என்கிறார். இது ஏன் முடியாது? அறவழிப் போராட்ட வழிமுறைகள் தமிழ் அரசியலுக்குப் புதிதல்ல. ஒரு கேள்வி: இப்படியொரு அகிம்சைப் போராட்டம் நடந்தால் கவிஞர் அதில் கலந்து கொள்ள அணியமா?



**கேள்வி (9)** ஏதாவது ஒரு மேடையில் விக்னேஸ்வரன் என்னுடைய தாயகம் தமிழீழம் என்று சொல்லமுடியுமா? விக்னேஸ்வரனோ சம்மந்தனோ துணிச்சலாக ஒருமேடையில் என்னுடைய தாயகம் தமிழீழம் என்று சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமா இன்னிலையில் இவர்கள் சமஸ்டி பேசுகின்றார்கள்.

**பதில்:** அப்படிச் சொல்ல அவர்கள் என்ன அறிவிலிகளா? சொன்னால் 6 ஆவது சட்ட திருத்தம் அவர்கள் மீது பாயும்? அதைத்தான் கவிஞர் விரும்புகிறாரா? கவிஞர் இலங்கைக்குத் திரும்பி ஒரு மேடையில் துணிச்சலாக என்னுடைய தாயகம் தமிழீழம் என்று சொல்ல அணியமா?



**கேள்வி(10)** வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறுகின்றது. தமிழ் நாட்டுமக்கள் திரு விக்னேஸ்வரனை விடப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழக முதல்வர் ஜெயலிதா, தமிழீழத்திற்கு வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றார். தமிழீழத்திற்காக தமிழ்நாட்டில் இருந்து கூட்டமைப்பை விட அதிகமாக போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

**பதில்:** மெத்த மகிழ்ச்சி. தமிழ்நாட்டு மக்கள் போராடுவது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. தில்லியின் கதவைத் திறப்பதற்குரிய திறவுகோல் தமிழ்நாட்டுத் தமிழ் மக்களிடம் இருக்கிறது. முதல்வர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதைப் பாராட்டுகிறோம். முள்ளிவாய்க்கால் அவலத்தின் போது போரில் மக்கள் இறப்பது வழக்கமான காரியம். இந்திய அரசு சிறிலங்காவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட முடியாது, விடுதலைப் புலிகள் பயங்கரவாத இயக்கம் என்றெல்லாம் பேசினார். அவரும் அவரது கட்சியும் எமது போராட்டத்தை ஆதரித்து வீதியில் இறங்கிப் போராடியதே கிடையாது. ஆனால் தேர்தலுக்குப் பின்னர் (2011) அவர் மனம் மாறித் தனது நிலைப்பாட்டை மாற்றியிருக்கிறார். அதனை வரவேற்கிறோம். ஆனால் வி.புலிகள் இயக்கம் பற்றிய நிலைப்பாட்டை அவர் மாற்ற இந்தப் பொழுதும் அணியமாய் இல்லை. அது சரி, சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றினால் அதற்குப் பெயர் போராட்டமா?

**கேள்வி (11)** தமிழ்நாட்டில் நெருப்பு விட்டு எரியும் தமிழீழ விடுதலை உணர்வினை அணைக்கவேண்டும் என்று நினைக்கிறார் விக்னேஸ்வரன். அது அணையாது. உலகத்தில் நீங்கள் மட்டும்தான் தமிழீழத்திற்காக இருக்கின்றீர்கள் என்று நினைக்காதீர்கள். தமிழீழத்தில் தமிழீழமா சமஷ்டியா என்று ஒருதேர்தல் நடத்த முடியுமா? அப்பொழுது பாருங்கள் மக்கள் உங்கள் முகத்தில் செருப்பால் அடிப்பார்கள். இவ்வாறான சின்னத்தனமான முயற்சிகளில் இறங்காதீர்கள் என்று விக்னேஸ்வரனை பார்த்து பணிவாக கேட்டுக்கொள்கின்றேன் என்று உணர்ச்சி கவிஞர் காசியானந்தன் தெரிவித்துள்ளார்.

**பதில்:** கவிஞர் நாகாக்க வேண்டும். இந்தக் கேள்வியை தமிழ்நாட்டில் இருந்து கொண்டு கேட்டு என்ன பயன். இலங்கைக்குச் சென்று கேட்க வேண்டும். நான் கவிஞரைக் கேட்கிறேன். "தமிழீழத்தில் தமிழீழமா சமஷ்டியா என்று ஒருதேர்தல் நடத்தமுடியுமா? நடத்தினால் அதில் கவிஞர் பங்கேற்க அணியமா? எதுவாக இருந்தாலும் சென்னையில் பத்திரமாக இருந்து கொண்டு தாயகத்தில் இருப்பவர்களுக்கு அறைகூவல் விடுவது பொருத்தமாகப்படவில்லை. சென்னையில் பாதுகாப்பாக இருந்து கொண்டு செருப்பு அது இது என்று பேசுவதும் அறமாகப் படவில்லை. இந்தக் கேள்விகளைப் படிப்பவர்கள் மனிதர் மனநலத்துடன் தான் இருக்கிறாரா என்று கேட்கக் கூடும். "தமிழீழத்தில் தமிழீழமா சமஷ்டியா என்று ஒருதேர்தல் நடத்தமுடியுமா" என்று கேட்பது 'லூசு'த்தனமான கேள்வி. இப்படியான வெற்று அறைகூவல்களை விட்டு விட்டு யதார்த்த அரசியல் பற்றிப் பேசுவோம். அதுதான் இன்றைய தேவை.

தமிழ்நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்கள் வட மாகாண சபைத் தேர்தலில் திரு.விக்னேஸ்வரன் வெற்றிவாகை சூடியதைப் பாராட்டி இருக்கிறார்கள். கலைஞர் கருணாநிதி, வைகோ, தொல் திருமாவளவன், மருத்துவர் இராமதாஸ், ஞானதேசிகன், மத்திய தொழில் மற்றும் வணிகத் துறை இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன், பாரதிய ஜனதா கட்சித் தலைவர் இராஜ்நாத்சிங் போன்றோர் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்கள். இந்தியா, அமெரிக்கா, அய்ரோப்பிய ஒன்றியம் தேர்தல் முடிவை வரவேற்றிருக்கின்றன.


தேர்தலில் மக்கள் திரு.விக்னேஸ்வரனுக்கு 1,32,000 விருப்பு வாக்குகளை போட்டுள்ளார்கள். இந்தளவு விருப்பு வாக்குகளை இதற்கு முன்னர் எந்தவொரு தேர்தலிலும் தமிழர் எவரும் பெற்றதில்லை. இது தமிழர்கள் வடக்கு, கிழக்கு, மேற்கு என்று பிரிந்து நிற்கவில்லை என்ற செய்தியை உரக்கச் சொல்கிறது. எங்களுக்குத் தேவை எலி பிடிக்கிற பூனை. அது கொழும்பா, யாழ்ப்பாணமா, மட்டக்களப்பா என்பது தேவையற்ற கேள்வி.

முடிவாகத் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு கவிஞர் காசி ஆனந்தன் வாய்க்கு வந்தபடி பேசக் கூடாது. யாகாவா ராயினும் நாகாக்க வேண்டும். காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்கா விட்டாலும் நாவையாவது காக்க வேண்டும். காக்கத் தவறினால் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

மீண்டும் சொல்கிறேன் திரு.விக்னேஸ்வரன் மீது வசை பாடுவது அவருக்கு வாக்களித்த மக்களை அவமதிப்புச் செய்வது போன்றது.

திரு.விக்னேஸ்வரன் அரசியலுக்கு வந்ததை நிலத்திலும் புலத்திலும் உள்ள தமிழ்மக்கள் நெஞ்சார வரவேற்றிருக்கிறார்கள்.

திரு.விக்னேஸ்வரன் அரசியலுக்குப் புதிதாக இருக்கலாம். ஆனால் அவர் தேசியத்துக்குப் புதியவரல்ல.



அவரது அரசியல் நுழைவு தமிழ் மக்கள் மனதில் ஒரு புதிய நம்பிக்கையை உருவாக்கியுள்ளது. ஒரு புதிய எழுச்சியை உண்டாக்கியுள்ளது. ஒரு புதிய எதிர்பார்ப்பை எழுப்பியுள்ளது. இதனைக் கவிஞர் காசி ஆனந்தன் இனிமேலாவது புரிந்து கொள்ளவேண்டும்!


A-Lanka Travel Ltd

We make it easy to take it easy

Tooting Broadway
171 Tooting High Sreet, Tooting, Londan SW17 0SZ
020 8672 5551, 020 8672 2010

வாரத்தில் 7 நாட்களும் எமது முழுமையான சேவை

We Serve all 7 Days in a week

உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான விமானச் சீட்டுகளை
உடன் பெற்றிட நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம்

For Special Family Discount and Emergency Ticket only.
Please Contact
Wimal on 07956 206 709

உங்கள் சகல பிரயாணத் தேவைகளுக்கும் அழையுங்கள்...

020 8672 5551 | 020 8672 2010

இந்தியா/ இலங்கை சென்று வர விசா எடுத்துத் தரப்படும்.
Indian/ Sri Lankan Visa Services available

அவசர உடன் டிக்கட்களுக்கு அழையுங்கள்: 07956 206 709
விமல் /விஜி 07957 121 696
Wimal/ Viji

Email: wimal@a-lankatravel.co.uk | web:www.a-lankatravel.co.uk



குடிவரவு விண்ணப்பங்கள் & மேன்முறையீடுகள்

Immigration Application and Appeals

- அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் Fresh Applications
- உங்கள் உறவினர்களை வரவழைக்கும் விண்ணப்பம்
- இலங்கை, இந்தியாவில் பிரித்தானிய விசா நிராகரிப்புக்கு எதிரான மேன்முறையீடு
- குழந்தைகள் 7 வருடம் தொடர்ச்சியாக வசித்திருப்பின் வதிவிட விசா விண்ணப்பம்
- பிரித்தானிய குடியுரிமை விண்ணப்பங்கள் நிரந்தர குடியுரிமை விண்ணப்பங்கள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்
- ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருவோர், திருமணம் செய்வோருக்கான EEA விண்ணப்பங்கள்

1. Visitors & Dependent Visa - Human Right Claim- Immigration Detention Matters - Bail Applications
2. Social Welfare Benefits - Visa Extension
3. Entry Clearance Applicaton (Spouse - Family Reunion Visitor - Settlement - Student - Prospective Student)
4. Point based Applications: Tier 1 -Tier 5 (Student/ Entrepreneur Visas)

மொழி பெயர்ப்புச் சேவை தமிழ் - சிங்களம்

Kulendran Immigration Law Chambers,
90 High Street,
Colliers Wood, SW19 2BT,
0208 682 4494/ 0208 542 8222/ 07769185592,
Email: kilc_work@yahoo.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைப் பை திருடியவர் கைது செய்யப்பட்டார்

பலவகையான பெறுமதி மிக்க 705 கைப் பைகளை திருடி விற்று வந்த 48 வயதுப் பெண்மணி ஒருவர் கடைசியில் கையும் மெய்யுமாக கைது செய்யப்பட்டார்.

ஜெப்ன் ராண்ட் என்ற பெண்மணி ஐந்து லட்சம் பவுண்ட்ஸ்களுக்கு மேலான பெறுமதி மிக்க கைப் பைகளை திருடியுள்ளார்.

பிரித்தானியாவின் மிகப் பெரிய கைப் பைகளை திருடியதாக இவரை பொலிஸார் வர்ணித்துள்ளனர். தெற்கு வேல்ஸ் பகுதியில் கைது செய்யப்பட்ட இவர் தான் திருடிய பைகளை 80,000 ற்கு விற்றுள்ளார். பிணையில் விடப்பட்டுள்ள இவருக்கான தண்டனை இம் மாத இறுதியில் வழங்கப்படவுள்ளது.

## கர்ப்பிணிப் பெண்களுக்கு பாதுகாப்பானது மீன்

கர்ப்பிணிப் பெண்கள் மீனை அளவாக சாப்பிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் சுறா மீனையும் வாளை மீனையும் தவிர்க்குமாறு உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## கூட்டணி இல்லை

தற்போதைய பிரித்தானிய ஆளும் கட்சி ஐக்கிய ராச்சிய சுயேட்சைக் கட்சியுடன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டணி அமைக்காது என்று பழமை பேணும் கட்சியின் பிரதான உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். அண்மையில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் UKIP கட்சி உறுப்பினர்கள் கூடுதலாக வெற்றி பெற்றிருந்தமை ஆளும் கட்சி உறுப்பினர்களை வெகுவாக உறுத்தியிருந்தது.

## குடும்ப வைத்திய நிலையங்கள் தினமும் திறக்க வேண்டும்

குடும்ப வைத்திய நிலையங்கள் தினமும் இரவு 8.00 மணி வரை திறந்திருக்க வேண்டும் என்று பிரித்தானிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஐந்தில் ஒரு நோயாளிக்கு பொது வைத்தியர்களின் வைத்திய நிலையங்கள் திறந்திருக்கும் தற்போதைய நேரங்கள் சிரமங்களை ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வைத்திய நிலையங்கள் திறந்து வைத்திருப்பது பல வகைகளிலும் பயனுள்ளதாக அமைவதுடன் பொது வைத்தியசாலைகள் மிக முக்கியமான நோயாளிகளை பார்வையிட வசதி செய்து கொடுக்கப்படும்.





## இத்தாலி லம்படுதுஷாவில் படகு விபத்து தேடுதல் கைவிடப்பட்டது

இத்தாலி லம்படுதுஷாவில் கடலில் படகு கவிழ்ந்ததில் 300ற்கு மேற்பட்ட ஆபிரிக்க நாட்டு அகதிகள் பலியாகியுள்ளனர்.

ஒக்டோபர் 01ம் திகதி எட்ரியா, ஆபிரிக்க நாடான சோமாலியா மற்றும் கானா ஆகிய நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்கு சட்ட விரோதமாக குடியேறுவதற்கு படகில் சென்ற வேளையில் கடலில் 20 மீற்றர் தூரத்தில் இவ்அனர்த்தம் இடம்பெற்றது. இதில் பயணித்த 500 பேரும் கடலில் மூழ்கி தத்தளித்தனர். இவ்வனர்த்தத்தில் 150 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இறந்தவர்களில் பெருமளவு பெண்கள் என மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். நீந்தத் தெரிந்தவர்களும், வலிமையானவர்களுமே உயிர் தப்பியோர் ஆவார். இந்தச் சம்பவத்திற்கு பின்னராவது ஏதாவது மாற்றம் ஏற்படலாம் என்று லம்படுதுஷா மாநகர முதல்வர் தெரிவித்தார்.

## தமிழினி குலேந்திரன் திரும்பவும் பரிசு தருகிறார்!

எங்கடை 'தமிழினி' இருக்கிறார் பாருங்கோ, அவர்தான், வ.மா.குலேந்திரன்! தெரியுந்தானே? ரூற்றிங் மாளிகையிலை இருந்து கொண்டு இங்கை, பிரித்தானியாவுக்கு வாற போற ஆக்களுக்கு வீசாக்கள் எடுத்துக் குடுத்துப் பாரிய சேவையள் செய்யிறவர். கிட்டடியிலை எலிசபெத்து மகாராணியாரைப் பற்றி முதலிலை ஒரு சோக்கான புத்தகம் வெளியிட்டு, இப்ப அரண்மனைக்குக் கிட்டவும் போயிட்டார், பாருங்கோ! மற்றது, அதே கூட்டத்திலை லண்டனிலை இலை மறை காய்கள் போலை (சில புளிச்சுப் போன கொந்தல் பழங்களும் தான்; என்னைப் போல, எண்டும் சொல்லலாம்) சமூகத்திலை ஒளிச்சு இருக்கிற, அவருடைய அனுபவத்திலை நேர்மைத் திறமைசாலியள் நல்லவர்கள் என்று தெரிந்து பன்னிரண்டு பேருக்கு கேடயங்கள் பரிசளித்துக் கௌரவித்த பெரு - மனத் தமிழினியர்!

அது மட்டுமே? மனிசன், சுவையாய் எழுதும்! ரண்டு வருசத்துக்கு முன்னம் 'இலங்கை ஜனாதிபதிகள்', 'இலங்கைத் தமிழ் அறிஞர்களும் முஸ்லிம் அறிஞர்களும்' என்ற ரண்டு புத்தகங்கள் தமிழ்நாட்டு, பழம் மணிமேகலையோடை கை-பிடிச்சு வெளியிட்டார். மற்றது, 'தமிழினி' எண்ட பத்திரிகையை இவர் தொடங்கி நடத்தினதும், பிறகு இன்னும் ஒரு மாசப் பத்திரிகையை இந்தியாவில் தொடங்கி நடத்தினதும் எம் பலருக்கு ஞாபகம் இருக்குது. இப்பிடி இந்த மனிசன் சும்மா இராது! இதிலை, சுவாமியர் யோகருக்கும் இவருக்கும் பிறப்பிலை இருந்து முரண்பாடு. எலும்பு நோயோடை ஆசுப்பத்திரிக்கு அலைஞ்சாலும் தமிழினி சும்மா இருக்காது. ஏதோ புதிசுபுதிசாய் எழுத வேணும், வெளியிட வேணும், பரிசு குடுக்க வேணும், பாராட்ட வேணும், சரித்திரம் படைக்க வேணும் என்று எப்பவும் முயற்சி செய்யிற ஆத்துமா இது! எனவே தம்பி குலேந்திரனிலை முதலில் சந்திச்ச 1999இலை இருந்து ஒரு கூர்ந்த கண், எனக்கு! அவருக்கும் என்னிலை உருக்கமான பாசம்!

இப்ப, 2013 ஒக்தோபர் 15 இலை, இன்னும் ஒரு பரிசை எமக்கு அளிக்க முன்வந்து அறிவித்திருக்கிறார். எனவே தமிழினிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குகிறேன்.

*நன்றி.*

*பேராசிரியர் கோபன் மகாதேவா*

## வடமாகாணசபை முதலமைச்சர் ஜனாதிபதி முன். சத்தியப்பிரமாணம்


நீண்டகால இடைவெளிக்குப்பின் வடமாகாணசபைத் தேர்தல் நடைபெற்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்டு ஒரு லட்சத்து இருபதினாயிரம் வாக்குகளுக்கு மேல் பெற்று வெற்றிவாகை சூடிய முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி சி.வி.விக்னேஸ்வரன் சில்லறைகளுக்கு முன் சத்தியப்பிரமாணம் செய்யாது இலங்கையின் ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

வழமையாக முதலமைச்சர்கள் அந்த மாகாணசபையின் ஆளுநரிடமே சத்தியப்பிரமாணம் செய்வது வழக்கம். தேர்தலுக்கு முன்னமே வடமாகாண ஆளுநரை நீக்க ஜனாதிபதியுடன் கதைத்துத் தீர்மானம் மேற்கொள்ளுவேன் என்று சூளுரைத்த சி.வி.விக்னேஸ்வரன் தன்னிலும் பார்க்க தகுதியானவர் என்று ஒரு நாட்டின் ஜனாதிபதியிடம் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்வது பொருத்தமான விடயமே. மேலும் வடமாகாணசபை நிர்வாகத்தைச் சுமுகமாக நடத்த இந்த நடைமுறை பயனுள்ளதாக அமையும் என்று முதலமைச்சர் எடுத்த தீர்மானம் வரவேற்புக்குரியதே.

## கழிவறையில் வழுக்கி விழுந்த குமரி ஆனந்தனுக்குத் தலையில் காயம்

### உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது

தர்மபுரி மாவட்டத்திலுள்ள பாப்பாரப்பட்டியில் பாரதமாதா கோயில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் குமரி ஆனந்தன் உண்ணாவிரதம் அறிவித்திருந்தார். அதற்காகச் சென்னையிலிருந்து தர்மபுரிக்கு வந்தவர் அங்குள்ள விடுதியொன்றில் தங்கியிருந்தார். இரவு திடீரென ஏற்பட்ட வயிற்றுப் போக்குக் காரணமாக கழிவறைக்குச் சென்றவர் வழுக்கி விழுந்துவிட்டார். தலையில் ஏற்பட்ட காயத்துக்காக உடனடியாக அவர் தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அதனால் அவரால் மேற்கொள்ளப்படவிருந்த உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. பாரதமாதா என்ன தவம் செய்தாரோ தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலதும் பத்தும்

## ஆறாம் வகுப்பு மாணவியின் அசாத்திய திறமை : வியாதியை சொல்லுங்கள் மருந்து சொல்கிறேன்!

இந்தியாவின் அம்பத்தூரை சேர்ந்தவர் பாஸ்கர், பாக்கியலட்சுமி. இவர்களுடைய மகள் பாக்யஸ்ரீ, வயது 11. அம்பத்தூரில் உள்ள ஒரு பள்ளியில் 6ம் வகுப்பு படிக்கிறார். அதீத திறமையுள்ள இந்த பாக்யஸ்ரீயிடம் எந்த நோயை பற்றி சொன்னாலும், அந்த நோய்க்கான மருந்தின் பெயரை அடுத்த நொடியே சொல்லி விடுகிறார். மருந்துகளின் குறியீட்டை கூறினாலும் மருந்துகளின் பெயரையும், அது எந்த நோய்க்காக கொடுப்பது எனவும் கூறுகிறார். இப்படி ஆயிரம் நோய்க்கான மருந்துகளின் பெயரை சொல்லி அசத்துகிறார். பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மருந்துகளின் பெயரை கூறி 48விருதுகளை பெற்றுள்ளார். இதுமட்டுமின்றி பள்ளியில் 2.30 மணி நேரம் நடைபெறும் தேர்வை 40 நிமிடத்தில் எழுதி முடித்து விட்டு வந்துவிடுவாராம். இவர் 3ம் வகுப்பு படிக்கும்போதே எந்தவொரு புத்தகத்தையும் உடனுக்குடன் படித்துமுடித்து விடுவார். இவ்வாறு தனது நினைவாற்றலை வளர்த்துக்கொண்ட இவர் மருத்துவத்துறை சம்மந்தப்பட்ட புத்தகங்களை படிக்க ஆரம்பித்து, இதுவரை மருத்துவ படிப்புக்கான ஏராளமான புத்தகங்களை படித்து முடித்தும் விட்டார்.

## மன அழுத்தத்தை அறியும் சட்டை வடிவமைப்பு!!

இதய துடிப்பு, மூச்சு விடும் அளவு, உறக்கம் போன்றவற்றை துல்லியமாக கணக்கிட்டு, மனிதனின் மன அழுத்தத்தை அளவிடும் சட்டையை, கனடா நாட்டு ஆய்வாளர்கள் வடிவமைத்துள்ளனர். கனடா ஆய்வாளர்கள், நவீன முறையில் வடிவமைத்துள்ள, புதிய சட்டையின் செயல்பாடுகள், ஸ்மார்ட் போனுடன் இணைக்கப்பட்டுள்ளன. விசேஷ கருவி பொருத்தப்பட்டுள்ள, இந்தசட்டையை அணிபவரின், உறக்கம், அவரின் மூச்சுவாங்கும் அளவு, இதயத் துடிப்பு போன்றவற்றை, துல்லியமாக அளவிட முடியும். இந்த அளவுகள், சட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள, ஸ்மார்ட்போனில் தெரியும். இதன் மூலம், இதைஅணிபவரின், இதயத் துடிப்பு மற்றும் மூச்சு விடும் அளவு போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களின் மூலம் அவரின், மன அழுத்தத்தின் அளவை கணக்கிடமுடியும். இதே போல், இதை உறங்கும் போது அணிந்து கொள்வதின் மூலம், அவரின் உறக்கம் பற்றிய அளவீட்டையும் தெரிந்து கொள்ளலாம். இந்த சட்டைக்கு, "ஹெக்சோஸ்கின்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த ஆடையை, விளையாட்டு வீரர்கள் பயன்படுத்துவதின் மூலம், தங்கள் பயிற்சியின் போது ஏற்படும் குறைகளை அறிந்து, செயல் திறனை மேம்படுத்திக் கொள்ளலாம் என, ஆடை வடிவமைப்பாளர்கள் கூறியுள்ளனர். சாதாரண ஆடையைப் போலவே காட்சியளிப்பதால், நேரடியாக பயிற்சிகளின் போது, விள்ளயாட்டு வீரர்கள் அணிந்து கொள்ள முடியும்.

## 10 வயது சிறுவன் 2 கம்பெனிக்கு சி.இ.ஓ (C.E.O)

கோலாலம்பூர், மலேசியாவை சேர்ந்த 10 வயதுசிறுவன், 2 கம்பெனிகளுக்கு தலைமை செயல் அதிகாரியாக கலக்குகிறான். படிப்பை பாதியில்விட்ட அவனுக்கு, கல்லூரிகளில் 1 மணி நேரம் விரிவுரையாற்ற ரூ.82,000 ஊதியம் தரப்படுகிறது. மலேசிய தலைநகர் கோலாலம்பூரைச் சேர்ந்தவர் செரியனா அலியாஸ். இவரது மகன் ஆதி புத்ர அப்துல் கனி. வயது 10. அன்னையின் 2 நிறுவனங்களின் தொழிலையும் கவனித்துக் கொள்ளத் தொடங்கி, இப்போது 2 நிறுவனங்களின் செயல்பாட்டையும் ஏறக்குறைய தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளான். இதனால் அந்த கம்பெனிகளின் தலைமைச் செயல் அதிகாரி என அவனை அழைக்கின்றனர். வயதுக்கு மீறிய அறிவாளித்தனம் காரணமாக, மூன்றாம் வகுப்போடு படிப்பை நிறுத்திய அப்துல் கனி, பாடப் புத்தகங்களைப் படிப்பதை விட இன்டர்நெட்டில் அதிகம் அறிய முடிகிறது என்கிறான். இதற்கிடையே, பல பாடப் பிரிவுகளில் அவனுக்கு உள்ள அபார ஞானத்தை அறிந்த மலேசிய கல்லூரிகள், அவனை பகுதி நேர விரிவுரையாளராக அழைக்கின்றன. இஸ்லாமிய ஆய்வுக் கல்வியில் விரிவுரையாளராக விரும்புவதாக கூறும் சிறுவனை, கனடா, சிங்கப்பூர், அமெரிக்காவில் படிக்க வைக்க அவனது தாய் திட்டமிட்டுள்ளார்.

## ஜப்பான் நாட்டில் நிலத்திற்கு (Underground Bicycle Parking) கீழ் துவிச்சக்கர வண்டியை நிறுத்தும் புதியதொழில்நுட்பம்!

ஜப்பான் நாட்டில் நிலத்திற்கு (Underground Bicycle Parking) கீழ் துவிச்சக்கர வண்டியை நிறுத்தும் புதியதொழில்நுட்ப முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது அந்நாட்டின் இடப்பற்றாக்குறையை கருத்தில்கொண்டு உருவாக்கப்பட்டது. துவிச் சக்கரவண்டியை நாம் கொண்டு சென்று நிறுத்த வேண்டியதேவையில்லை. கீழே இறக்கும் பொறி (elevator)யில் உங்கள் துவிச்சக்கர வண்டியை வைத்தால் நிலத்திற்கு அடியில் உள்ள தொழில்நுட்பக் கருவி 40வினாடியில் உங்கள் வண்டியை இடம் பார்த்து நிறுத்தி விடும். 200 வண்டியை நிறுத்தஇடமுண்டு. நீங்கள் வண்டியை கீழே இறக்கும்பொறி (elevator)யில் அனுப்பியவுடன் உங்களிற்கு உங்கள் வண்டியை நிறுத்தியதற்கான அட்டை (parking card) தானியங்கி மூலம் கிடைக்கும். பின்பு அதை வாசிப்பதன் (scan) மூலம் உங்கள் துவிச்சக்கர வண்டியை மீண்டும் நீங்கள் பெறலாம்.

## ஆச்சர்யப்பட வைக்கும் 10 ஒற்றுமைகள் மட்டுமல்ல உலக அதிசயமும் கூட!

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து கொல்லப்பட்ட ஆப்ரஹாம் லிங்கன், மற்றும் ஜான் கென்னடி இருவருக்குள்ளும் :

1. ஆப்ரகாம்லிங்கன் 1860 ஆம் ஆண்டும், ஜான்கென்னடி 1960 ஆம்ஆண்டும் அமெரிக்க ஜனாதிபதியானார்கள். சரியாக நூறு வருடஇடைவெளி.

2. இருவரும் வெள்ளிக்கிழமை அன்று, தத்தம் மனைவிகளின் அருகில் இருக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

3. இருவர் மனைவிகளும் வெள்ளை மாளிகையில் வாழும்போது பிள்ளை பெற்றனர். பிறந்தவுடன் குழந்தை இறந்தும் போனது.

4. இருவரும் தலையின் பின்பகுதியில் குண்டு துளைத்துச் செத்தார்கள்.

5. இருவரும் இறந்த பின், ஜான்சன் என்ற பெயருள்ளவர்கள் உடனே ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார்கள். (ஆண்ட்ரூ ஜான்சன், லிண்டன் ஜான்சன்).

6. ஆண்ட்ரூ ஜான்சன் பிறந்தது 1808. லிண்டன் ஜான்சன் பிறந்தது 1908. சரியாக அதே நூறு வருட இடைவெளி.

7. இருவரையும் கொன்றவர்கள் பிறந்த வருடங்கள்கூட நூறு வருட இடைவெளிகள். ஜான் வில்க்ஸ்பூத் பிறந்தது 1839. லீஹார்விஆஸ்வால்டு 1939.

8. இருகொலைகாரர்களும் பிடிபட்டு வழக்குத் தொடுப்பதற்கு முன் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

9. பூத், லிங்கனை ஒரு தியேட்டரில் கொன்று விட்டு ஒரு கிடங்குக்கு ஓடினான். ஆஸ்வால்டு ஒருகிடங்கிலிருந்து கென்னடியை கொன்று விட்டு தியேட்டர் நோக்கி ஓடினான்.

10. லிங்கனின் செயலாளரின் முன் பெயர் ஜான். ஜான் கென்னடியின் செயலாளரின் பின் பெயர் லிங்கன்.

## கூகிள் கண்ணாடி தொழில்நுட்பம்!

சிறிய மூக்கு கண்ணாடி பட்டையளவே உள்ள கூகிள் கண்ணாடியில் அனைத்து வசதிகளும் வந்துவிட்டது. இது வெறும் கண்ணாடி அல்ல. ஒருமினி ஸ்மார்ட்போன், ஒரு மினி கம்ப்யூட்டர். ஒருமினி லேப்டாப். ஒரு மினி டேப்ளட். இப்படி எதைச் சொன்னாலும் இதற்கு ஒப்பாகாது. ஏனென்றால் இவைகளில் உள்ள அனைத்து வசதிகளையும் ஒருங்கே பெற்றுள்ளது கூகிள் கண்ணாடி (Google Glass). மொபைல் தொழில்நுட்பத்தின் அடுத்தக்கட்ட பரிணாமம் என்று கூட இதைச் சொல்லலாம். இதுவரைக்கும் வந்த மொபைல்களில் உள்ள அனைத்து முக்கிய அம்சங்களும் இந்த கூகிள் கண்ணாடியில் உள்ளது.

மின்னஞ்சலுக்கு வாய்மொழி (Voice input) மூலம் பதிலளித்தால், அது எழுத்துக்களாக மாறிவிடும். ஏதாவது சந்தேகம் ஏற்பட்டு, கண்ணாடியிடம் கேட்டால், உடனே பதில் தந்து விடும். எங்காவது வெளியில் அல்லது வெளியூரில் பயணிக்கும் போது, செல்லவேண்டிய பகுதிக்கு வழி கேட்டால் அந்த வழிக்குரிய பாதையை (MAP) திரையில் (screen) காண்பிக்கும். நம் கண்ணால் பார்க்கும் பகுதிகள் அனைத்தையும், இங்கிருக்கும் உறவினர்கள், நண்பர்களுக்கு நேரடியாக ஒளிபரப்பலாம் (Live Telecos), அன்றாட பழக்க வழக்கங்களை கவனிக்கிறது. இது ஒரு மொழி மாற்றியாகவும் (Translator) செயல்படுகிறது. இத்தனை சிறப்பம்சங்கள் கொண்ட இதனுடைய விலை சற்று அதிகம்தான். ஆனால் இதிலுள்ள வசதிகளை ஒப்பிட்டுப்பார்க்கும்போது இதனுடைய விலையும் குறைவுதான். எவ்வளவு என கேட்கிறீர்களா? அதிகமில்லை 95 ஆயிரம் மட்டும்தான்.

## சும்மா படுத்து கிடப்பதற்கு மாதம் 5000 அமெரிக்க டாலர் சம்பளம்!

சும்மா படுத்து கிடப்பதற்கு மாதம் 5000 அமெரிக்க டாலர் மாத ஊதியமாக தரகாத்திருக்கிறார்கள். அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் நாசா. 'பெட் ரெஸ்ட் ஸ்டடி' என்ற ஆய்வுக்காக இந்த தேடுதல் என்று நாசா தெரிவித்துள்ளது. 'மைக்ரோ கிராவிட்டி' என்ற புவிஈர்ப்பு குறித்த ஆய்வுக்காக தேர்வு செய்யப்படுபவர்கள் எந்த வேலையும் செய்யாமல் தொடர்ந்து 70 நாட்கள் படுக்கையில் படுத்திருந்தால் போதும் என்கிறது ஆய்வு குழு. விண்வெளி செல்லும் வீரர்களின் பணியை எளிதாக்கும் பொருட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. ஆய்வுக்கு ஒப்புக்கொள்பவர்கள், 70 நாட்கள், 24 மணி நேரமும் ஒருசில பரிசோதனைகளுக்காக மட்டுமன்றி மற்றநேரங்களில் தொடர்ந்து 'ஹெட் டவுன் பெட்ரெஸ்ட் பொசிஷனில்' இருக்க வேண்டும்.

விண்கலத்தில் விண்வெளி வீரர்களின் உடல்எடையில் ஏற்படும், மாறுதல்கள் குறித்து துல்லியமாக அறிந்து கொள்ள, பெட்டில் படுத்திருப்பவர்களை விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணிப்பார்கள். ஆய்வுக்கு தேர்வு செய்யப்படுபவர்களுக்கு எலும்பு, தசை, இதயம், நரம்பு மண்டலம், சுழற்சி மண்டலங்கள், உணவு மற்றும் எதிர்ப்பு சக்தி குறித்து விரிவான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். ஆய்வுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் அமெரிக்கராக அல்லது அமெரிக்க நிரந்தர குடியுரிமை பெற்றவராக இருக்க வேண்டும்.

## நீச்சல் நல்லது ஆனால்!

குளோரின் கலந்த தண்ணீரில் நீச்சல் அடிக்கும்போது, பலருக்கு ஆஸ்துமா (Asthma) மற்றும் அலர்ஜி (Allergy) நோய் வருகிறது. சிலருக்கு தோல் பிரச்னை ஏற்படுகிறது என்பது சில பேரை பரிசோதித்தபோது தெரிய வந்துள்ளது. இளம்வயதினர், குளோரின் கலந்த தண்ணீரில் நீச்சல் பயின்றால், உடனே பாதிப்பு வராது. சுவாசக் கோளாறில் ஆரம்பித்து கடைசியில் ஆஸ்துமாவில் கொண்டு விடும் ஆபத்து உள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். குளோரின் கலந்த தண்ணீரில் நீச்சல் பயில்பவர்கள் கவனமாக இருத்தல் நன்று.

## கண்ணீர் ஒரு கிருமி நாசினி!

பொதுவாக உடலில் காயம் பட்டக் குழந்தைகள் அழுவதால், அவர்களது காயம் விரைவில் ஆறும். நிச்சயமாக, அழாத குழந்தைகளை விட, அழும் குழந்தைகளின் காயம் விரைவில் ஆறுவது அறிவியல் உண்மை. இதற்குக் காரணமாக அமைவது கண்ணீரில் உள்ள கிருமி நாசினி.

மனிதர்களின் கண்ணீரில் ஒரே ஒரு துளியை எடுத்து 6 ஆயிரம் துளி தண்ணீருடன் கலந்தால் கூட அந்தகலப்பு நீர் நூற்றுக்கணக்கான நோய்க் கிருமிகளைக் கொல்லும் சக்தி கொண்ட கிருமி நாசினியாகவே இருக்கும். லைசோசம் என்ற ஒரு வகை ரசாயனம் மனிதர்களின் கண்ணீரில் ஏராளமாய் இருக்கிறது. இதுவே கிருமி நாசினியாக செயல்படுகிறது. இனி காயம் பட்ட குழந்தைகள் அழுதால் அதற்காக அவர்களைத்திட்ட வேண்டாம் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி புடின் மோதிரத்தை திருடினாரா?



அமெரிக்காவைச் சேர்ந்த ரொபேட் கிராப்ட் என்ற தொழிலதிபர் தான் அணிந்திருந்த ரூ.15 லட்சம் மதிப்புள்ள வைர மோதிரத்தை ரஷ்ய அதிபர் புடின் தன்னிடம் இருந்து திருடிவிட்டதாக புகார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த 2005ம் ஆண்டு ரஷ்ய அதிபர் கலந்துகொண்ட விழாவில் நான் பங்கேற்றபோது, அந்த மோதிரத்தை தான் அவருக்கு நினைவுப் பரிசாக வழங்க இருந்ததாகவும் ஆனால் அவர் அதனை திருடிவிட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் புஷ் அதிபராக இருந்த கால கட்டத்தில் நடந்தது. இதுகுறித்து வெள்ளை மாளிகையில் புகார் செய்தேன். இருந்தும் எனது கோரிக்கையை அதிகாரிகள் ஏற்கவில்லை. இதன்மூலம் அமெரிக்க ரஷ்ய உறவில் சிக்கல் ஏற்படும் என்ற அச்சத்தின் காரணமாக இந்த விடயத்தை பெரிதுபடுத்தவில்லை.

இத்தகவலை சமீபத்தில் நியுயோர்க்கில் உள்ள ஒரு நட்சத்திர ஓட்டலில் நடந்த நிகழ்ச்சியில் இதை இவர் தெரிவித்தார். ஆனால் புடினின் செய்தி தொடர்பாளர் அந்த மோதிரம் அவருக்கு பரிசாக வழங்கப்பட்டது என்று கூறி தொழில் அதிபர் ரொபேட் கிராப்டின் இந்த புகாரை மறுத்துள்ளார்.

## வார இறுதி நாட்களில் உயிரிழப்பு அதிகம்

வார இறுதி நாட்களில் சத்திர சிகிச்சைக்கு உள்ளாகும் நோயாளிகளில் 82 வீதமானவர்கள் உயிரிழக்கும் அபாயத்திற்கு உள்ளாகின்றனர் என்று அண்மையில் வெளிவந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

லண்டன் இம்பீரியஸ் கல்லூரி 2008 -2011ற்கு இடைப்பட்ட காலத்தில் அனுமதிக்கப்பட்ட 4 மில்லியன் நோயாளிகளின் மீதான ஆராய்ச்சியில் அறியப்பட்டது.

சத்திர சிகிச்சை நடந்து 30 நாட்களில் 27,500 நோயாளிகள் இறந்ததாக புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

திங்கட்கிழமைகளில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டால் நோயாளிகள் பாதிப்படைவது குறைவு என்றும் அடுத்தடுத்த நாட்களில் பாதிப்பு விகிதம் கூடுதலானது என்றும் அந்த ஆய்வில் அறியப்பட்டது.

கடந்த அக்டோபரில் அப்பென்டிசைட் சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இளம்பெண்ணின் கருப்பையை அகற்றிய இரண்டு பயிற்சி மருத்துவர்களால் அந்தப் பெண் பரிதாபமாக உயிரிழந்தது தெரிய வந்துள்ளது. கர்ப்பவதியாக இருந்த அந்தப்பெண், குழந்தையையும் இழந்து, உயிரையும் இழந்தது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



இணுவில் ஒலி ஆசிரியருக்கு விருதினை வழங்குகிறார் பரிஸ்டர் ஜோசப்



புதினம் ஆசிரியர் திரு EK இராஜகோபால் அவர்களுக்கு விருது

# லண்டன் மாநகர் கண்ட 'இணுவில் ஒலி' அறிமுக விழாவும் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களுக்கான பாராட்டுவிழாவும்

'இணுவில் ஒலி' லண்டன் சிறப்பிதழின் அறிமுக விழாவும், இலக்கியக் கலாநிதி சாகித்திய ரத்தினா பேராசிரியர் சபா. ஜெயராசாவுக்கான பாராட்டு விழாவும், பிரபல எழுத்தாளர் வவுனியூர் இரா. உதயணன் தலைமையில் இலண்டன் சிவன்கோயில் மண்டபத்தில் 28.09.2013 அன்று மாலை நடைபெற்றது. இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராகப் பேராசிரியர் சபா.ஜெயராசாவும், சிறப்பு விருந்தினர்களாக திருவாளர்கள் தமிழினி குலேந்திரன், என்.இராசையா, எஸ்.சந்திரமோகன், தி.உதயகுமார், றெஞ்சி கந்தையா இரவீந்திரன் ஆகியோர் வருகைதந்து சிறப்பித்தனர்.

திருமதி ஜோக்கிம் அம்மையார், திருமதி சபா.ஜெயராசா, திருமதி குலேந்திரன், திருமதி உதயகுமார், திருமதி சந்திரமோகன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். இசைஞானம் மிக்கவராகிய திருமதி வேலையா அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்தினை இசைத்தார். திருமதி நிர்மலா விஜயகுமார் வரவேற்புரையை நிகழ்த்த புதினம் ஆசிரியர் ஈ.கே.ராஜகோபால் வாழ்த்துரை வழங்கினார். இணுவில் கிராமத்தின் பெருமையையும் அங்கு வாழ்ந்த கலைஞர்களைப் பற்றியும் ச.ஸ்ரீரங்கன் தமது உரையில் தெளிவுபடுத்தினார்.

தலைமையுரையை இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவனத்தின் தலைவரும், விழாவின் தலைவருமாகிய இரா.உதயணன் நிகழ்த்தினார். அவர் தமது உரையில், பேராசிரியர் சபா. ஜெயராசாவின் பல்துறை ஆளுமைகளை முன்னிறுத்தி அவரது படைப்புகளைப் பற்றியும் எடுத்துரைத்தார். அதைத்தொடர்ந்து பேராசிரியருக்கான கௌரவமும் திருமதி சபா. ஜெயராசாவுக்கான கௌரவமும் வழங்கப்பட்டன. இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் வவுனியூர் இரா.உதயணன் பேராசிரியருக்கு நினைவுச் சின்னம் வழங்கிச் சிறப்புச் செய்தார்.



வவுனியூர் இரா உதயணன்



திருமலை பாலா



பேராசிரியர் சபா ஜெயராசா

பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் தமது உரையின் ஆரம்பத்தில், "விழாவின் தலைவர் வவுனியூர் இரா உதயணன் அவர்களின் எழுத்துக்கள் யதார்த்தமானவை. வன்னிமண்ணின் நிகழ்வுகளை அவர் எழுத்துக்களில் கையாண்ட விதம் குறிப்பிட்டுக் கூறத்தக்கது.

'இணுவில் ஒலி' வளர்ச்சி கண்டுள்ளது. தரமான கட்டுரைகள் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்றும், அதன் தொடர் வளர்ச்சிக்கு எல்லோரும் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, தமக்கு வழங்கப்பட்ட 'பின் நவீனத்துவச் சிந்தனைகள்' என்னும் பொருளில் சிறப்புரை ஆற்றினார்.

'இணுவில் ஒலி' சஞ்சிகையின் ஆய்வுரையை எழுத்தாளரும் விமர்சகருமாகிய திருமதி நவஜோதி ஜோகரட்னம் மேற்கொண்டார். "இணுவில் ஒலி எல்லா அம்சங்களையும் உள்ளடக்கி ஒரு தரமான சஞ்சிகையாக மிளிர்கின்றது. சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், அறிவியல் திறனாய்வு மாணவர் ஆக்கங்கள் என்று பல்வேறுபட்ட விடயதானங்களையும் உள்ளடக்கிச் சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கின்றது" என்றார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராக வருகைதந்த தமிழினி குலேந்திரனின் சிறப்புரை இடம் பெற்றது. இணுவில் ஒலி சஞ்சிகையின் பிரதிகள் சபையாருக்கு வழங்கப்பெற்றன. ஆசிரியர் தம்பு சிவா தமது ஏறபுரையில் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உதவிய பெரியார்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவியவர்களுக்கும், சந்தாதாரராக இணைந்து கொண்டவர்களுக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்து, "இணுவில் ஒலி ஒரு கிராமத்தின் ஒலியாக வெளிவந்து இன்று எல்லோருக்கும் பொதுவான உலக சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. ஆகவே எல்லோரும் விரும்பி வாசிக்கக்கூடிய ஒரு பொதுச் சஞ்சிகையாகவே இச் சஞ்சிகை வெளிவரவிருக்கின்றது" என்று கூறினார்.

தொடர்ந்து புதினம் ஆசிரியர் ஈ.கே. ராஜகோபால் அவர்களும், இணுவில் ஒலி ஆசிரியர் தம்பு சிவா அவர்களும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவனத்தின் சார்பில் கௌரவிக்கப்பெற்றனர். கவிஞர் திருமலை பாலாவின் சிறப்பான நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவெய்தியது.

- த.சிவநித்திலன்

# தமிழ்நாட்டு மீனவர்களைத் துன்புறுத்துவதை ஸ்ரீலங்கா நிறுத்த வேண்டும்

## தமிழக முதல்வர் எச்சரிக்கை

தமிழ்நாட்டு மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் பலவகையான இன்னல்களுக்கு உள்ளாகி வருவது வேதனை தரும் விடயம்.

தமிழ்நாட்டு மீனவர்களைக் கடலில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினர் ஏற்படுத்தி வரும் கெடு



டியாக நிறுத்த வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.


தமிழக மீனவர்கள் தங்கி இளைப்பாறுவதற்கு வசதியாக கச்சத்தீவை ஸ்ரீலங்காவிடமிருந்து இந்தியா மீளப் பெற வேண்டும் என்ற கோரிக்கையை தமிழக முதல்வர் நீண்ட காலமாக முன்வைத்து வருவதும் அவதானத்துக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சபா. ஜெயராசா

“மாணவரிடத்து முதிர்ச்சி ஏற்படும்பொழுது குழந்தைப்பருவத்தில் உருவாக்கிக் கொண்ட எண்ணக்கருக்களில் உள்ள தவறுகளைத் திருத்தி மனத்திலே அமைத்துக் கொள்வர்.”

# அறிகை உளவியல்



உலகில் இன்று விரைந்து வளர்ச்சி பெற்று வரும் ஓர் அறிவுத் துறையாக ‘அறிகை உளவியல்’ (COG- NITIVE PSYC HOLOGY) அமைந்துள்ளது. மனிதரிடத்தே நிகழும் எத்தகைய ஒரு தோற்றப்பாட்டையும் அறிகை சார்ந்த தோற்றப்பாடாகவே அறிகை உள்வியல் கருதுகின்றது.

மனிதர் எவற்றைச் செய்கின்றனர், எவ்வாறு செய்கின்றனர், எவ்வாறு விளைவுகளை எதிர்கொள்கின்றனர் என்ற அனைத்தும் உள்ளத்தின் செயல் முறையோடு தொடர்புபடுத்திப் பார்க்கப் படுகின்றது. மனக்கவலைகள் ஏற்படும் பொழுது ஏன் அவை தோற்றம் பெற்றன என்பதைக் காரணகாரிய நிலையில் ஆராய்ந்து உரிய தீர்வுகளை எட்ட வேண்டுமென அறிகை உளவியல் வலியுறுத்துகின்றது.

மனிதருக்குரிய ஐந்து புலன்களினூடாகத் தகவல்கள் மூளைக்கு அனுப்பப்படுகின்றன. அத்தகைய தகவல்கள் மூளையில் ஒழுங்கமைக்கப்படும் முறையும், பயன்படுத்தப்படும் முறையும் அந்நிலையில் ஒருவரின் புலக்காட்சி (PERCEP- TION) மீது அறிகை உளவியல் ஆழ்ந்த கவனம் செலுத்துகின்றது.

புலக்காட்சி கொள்ள மொழியைத் திரட்டிக்கொள்ளல், பிரச்சினை விடுவிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள நுண்மதிப்பிரயோகம், கற்றற் செயற்பாடுகள் என்ற அனைத்தையும் அறிகை உளவியல் ஆய்வுக்கு உட்படுத்துகின்றது.

சூழலோடு ஊடாட்டம் கொண்டு குழந்தை நிலையிலிருந்தே ஒவ்வொருவரும் தமக்குரிய அறிகை அளவை மூளையில் உருவாக்கிக் கொள்கின்றனர். கூடுதலான ஊடாட்டங்கள் வினையாற்றம் கொண்ட அறிகை அழைப்பை உருவாக்குவதற்குத் துணை செய்யும். அந்நிலையில் மாணவர்களுக்குக் கூடுதலான அனுபவங்களைக் கிடைக்கச் செய்தல் வேண்டும். பள்ளிக்கூட அனுபவங்களுடன் வெளிப்புற அனுபவங்களையும் மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தலே சிறந்தது.

கற்றலுக்கு அடிப்படையாக முதலில் தேவைப்படுவது கவனஈர்ப்பு, கவனச் சிதைவு, கவனக் கலைப்பான்கள் முதலிய துறைகளிலே ஆசிரியரும் பெற்றோரும் முதற்கவனம் செலுத்துதல் வேண்டும். கவனத்தை ஈர்ப்பதற்கு உளவியலிலே பல நுட்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

பேச்சுத் தொனி, உடல்மொழி, தெளிவான எழுத்துக்கள், வண்ணப்படங்கள், முதலியவற்றைப் பயன்படுத்தி மாணவரின் கவனத்தை ஈர்ப்புச் செய்யலாம். பாடக்குறிப்புக்களின் கீழே மாணவர் கோடிடுதலும் முக்கியமான விடயங்களை உயர் ஒளிப்புச் (HIGHLIGHT) செய்தலும் கவனயீர்ப்பு நடவடிக்கைகளாகும்.

அறிகை உளவியலாளர் “எண்ணக் கருவாக்கம்” (CONCEPT FORMATION) என்ற செயற்பாட்டிலும் ஆழ்ந்த கவனம் செலுத்துகின்றனர். ஒரு விடயத்தின் உள்ளடக்கம் பற்றிய செறிவை மனத்தில் அமைத்துக் கொள்ளல் எண்ணக்கருவாக்கம் எனப்படும். கற்றல் என்பது எண்ணக் கருக்களை உருவாக்கும் செயற்பாடாகும். அறிவை திரட்டிக் கொள்ளல் என்பதும் எண்ணக் கருக்களைத் திரட்டிக் கொள்ளல் எனப்படும்.

எண்ணக்கருக்களை திரட்டிக் கொள்ளலிலே இடர்ப்பாடுகள் காணப்படுமாயின் அவை கற்றலிலே இடர்ப்பாடுகளாக மாறும், சூழலோடும் அறிவோடும் நிகழ்த்தப்படும் ஊடாட்டங்களாலும், ஆசிரியரின் வழிகாட்டலாலும், மாணவரின் முயற்சியாலும் எண்ணக்கருவாக்கம் முன்னெடுக்கப்படுகின்றது.

மாணவரிடத்து முதிர்ச்சி ஏற்படும் பொழுது குழந்தைப் பருவத்தில் உருவாக்கிக் கொண்ட எண்ணக்கருக்களில் உள்ள தவறுகளைத் திருத்தி மனத்திலே அமைத்துக் கொள்வர்.

மொழிக்கும் எண்ணக் கருவுக்கும் நேரடியான இணைப்பு உண்டு. சொற்கள் எண்ணக்கருக்களைத் தாங்கி நிற்கின்றன. உதாரணமாக “கடவுள்” என்பது ஒரு சொல்லாகவும் அமைகின்றது, எண்ணக் கருவாகவும் இருக்கின்றது. அதாவது கடவுளுக்குரிய இயல்புகள் உள்ளடக்கி நிற்கின்றது. மொழிவளமும் கற்றல் வளமும் அறிவு வளமும் ஒன்றிணைந்தவை.

அறிகை உளவியலில் “மீயறிகை” (META COGNITION) என்ற விடயம் சிறப்பாகப் பேசப்படுகின்றது. ஒருவர் தாம் எவ்வாறு சிந்திக்கின்றார் என்பதையும், தமது சிந்தனை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது என்பதையும் அறிந்து கொள்ளல் “மீயறிகை” ஆகின்றது. அதாவது அறிதல் பற்றி அறிதலே மீயறிகையாகின்றது.

சமகாலத்துப் பள்ளிக்கூடங்களின் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் பெரும்பாலும் அறிதல் உளவியற் கண்டுபிடிப்புக்களை அடியொற்றியே மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா & பிரிட்டன் நாடுகளுக்கிடையில் சிறப்பான நல்லுறவுகள்


இந்தியா, பிரிட்டன் நாடுகளுக்கிடையிலான நல்லுறவுகளை மேம்படுத்த முடியும் என்று குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியைச் சந்தித்த இந்தியாவுக்கான பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் ஜேம்ஸ் பேவன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உத்தரகாண்ட் மாநிலம் டேராடுனில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்குகொண்ட இந்தியாவுக்கான பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் செய்தியாளர்களைச் சந்தித்தபோது பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

“குஜராத் ஒரு முக்கியமான அரசு. நரேந்திர மோடி அந்த அரசின் முதல் அமைச்சராக உள்ளார். மற்ற மாநிலங்களைப் போல் குஜராத்தும் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே. இந்த அரசு இந்தியா பிரிட்டனுக்கு இடையேயுள்ள சிறந்த உறவுகளை மேம்படுத்த உதவ முடியும்” என்று கூறியுள்ளார்.

அடுத்த பொதுத்தேர்தலில் பிரதம மந்திரி வேட்பாளராக வர நரேந்திர மோடியின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.

## WATER WAR



2050ம் ஆண்டில் உலகில் மக்கள் சனத்தொகை 900 கோடியைத் தாண்டிவிடும் என்ற அதிர்ச்சியான தகவல் விஞ்ஞானிகளிடம் இருந்து வெளிவந்துள்ளது.

இன்றைய நிலையில் இங்கிலாந்தில் கழிவுநீரைச் சுத்திகரித்து நன்நீராக மாற்றி வழங்கும் முடிவை “தேம்ஸ் நீர்” (THAMES WATER) அண்மையில் எடுத்துள்ளது.

இந்தியாவில் தென்மாவட்டங்களில் குறிப்பாகத் தமிழகம், கர்நாடகா இடையில் இப்போது நடைபெறும் தண்ணீர்ப்பிரச்சனையில் குடுமிச்சண்டையில் இருந்தே தண்ணீரை எவ்வளவு தூரம் மதிக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

மக்களின் உயிர்வாழ்விற்கு முக்கிய தேவையாக இருக்கக் கூடிய தண்ணீருக்கு பற்றாக்குறையை நிவர்த்தி செய்து பரந்து விரிந்து காணப்படும் கடலில் இருந்து சுத்தமான நீரை சுத்திகரித்து எடுப்பதனை எந்த ஒரு அரசாங்கமோ அரச தலைவர்களோ விஞ்ஞானிகளோ முன்னெடுக்காதது வியப்பாக உள்ளதுடன் விந்தையாகவும் உள்ளது.

அணு ஆயுதங்கள், விண்வெளிப் பயணங்கள், பயங்கர ஆயுதங்கள், போர்கள் என்று நேரத்தை, பணத்தை, அறிவாற்றலை வீணடிப்பது மட்டுமின்றி வீணாக உயிர்களை பலிவாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சிரியாவில் நடைபெறும் உள்நாட்டு போரில் குழப்பவாதிகளுக்கு அமெரிக்கா, பிரித்தானியா ஆயுதம் வழங்க முயற்சிக்கின்ற நிலையில் ரஷ்யா அரசுக்கு ஆயுதம் வழங்குவதில் முனைப்புக் காட்டுகின்றது.

அழிவிற்கு ஆதரவாக அரசுகள், மதவாதிகள், தலைவர்கள் முன்னணியில் நிற்கும்போது நீர் பற்றிய நிலைப்பாட்டை யார் எடுப்பார்கள்?

திரு.அப்துல்கலாம் சனாதிபதியாக மீண்டும் வரக்கூடாது என்பதில் அக்கறை காட்டிய காங்கிரஸ் பின்னர் எவ்வளவு மோசடிகளில் ஈடுபட்டது என்பது எல்லோரும் அறிந்ததே.

மழைநீர், ஆற்றுநீர், கடல்நீர் போன்றவற்றிலிருந்து சுத்தமான நீரை பெறுவதற்கு ஏன் இந்த நீர்வள விஞ்ஞானிகள் கவனம் செலுத்த முடியவில்லை?

அண்மையில் ஐ.நா. செயலாளர் இது தொடர்பாகக் கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

## பிரபல பொப் பாடகர் மைக்கல் ஜக்சனின் மரணத்திற்கு நிகழ்ச்சிப் பொறுப்பாளர் காரணம் அல்ல



இசைச் சக்கரவர்த்தி மைக்கல் ஜக்சனுடைய தவறான மரணத்திற்கு நிகழ்ச்சிக்குழு பொறுப்பல்ல என்று ‘லோஸ் ஏஞ்சல்’ நீதிமன்ற யூரிகள் தீர்மானித்துள்ளனர். டாக்டர் கோனாட் முரேயை தெரிவு செய்த விழாக் குழு வைத்தியரை அந்த நேரத்தில் சந்தேகிப்பதற்கான காரணம் எதுவுமில்லை என யூரர்கள் தீர்மானித்துள்ளனர்.

தலா ஆறு ஆண், பெண்களைக் கொண்ட யூரர் குழு 2009ல் மரணமான இசைச் சக்கரவர்த்தியின் மரணத்திற்கு நஷ்டஈடு கேட்டு அவரது தாயாரால் தொடரப்பட்ட வழக்கிலே இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டன் மேயர் பொறிஸ் காதல் லீலை அம்பலம்!



லண்டன் மேயர் பொறிஸ் ஜோன்சன் (47 வயது) திருமணமான ஹெலன் என்பவருடன் ஏற்பட்ட தொடர்பால் அவருக்கு பெண் குழந்தை பிறந்திருப்பது மேன்முறையீட்டு நீதிமன்றினால் உறுதிப்படுத்தப்பட்டது.

லண்டன் மாநகர முதல்வரின் கடந்தகால நடவடிக்கைகள் மக்களுக்கு தெரியவேண்டும் என்று நீதிபதி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே திருமணமாகி நான்கு குழந்தைகளுக்கு தந்தையான பொறிஸ் அவரது மனைவியால் இச்செய்தி அறிந்து வீட்டிலிருந்து தூக்கி எறியப்பட்டுள்ளார்.

ஸ்ரெபனி என்றழைக்கப்படும் இப்பெண் குழந்தை 2009ல் பிறந்திருந்த போதும் இவரது பிறப்புச் சான்றிதழில் தந்தை பெயர் வெற்றிடமாகவே உள்ளது. பொது அலுவலகம் ஒன்றில் உயர்தர பதவியை வகிக்கும் ஒருவரின் செயற்பாடுகள் பற்றி பொதுமக்கள் அறியவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் தலாய்லாமா அறைகூறல்



முஸ்லிம்களுக்கு எதிரான வன் முறைகளில் பௌத்தர்கள் பர்மாவிலும் இலங்கையிலும் ஈடுபட்டுவருவது நிறுத்தப்படவேண்டும் என்று திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலய்லாமா அறைகூறல் விடுத்துள்ளார். பர்மாவில் பௌத்த மதத் துறவிகளே வன்முறையில் ஈடுபட்டு வருவதைச் சுட்டிக்காட்டிய ஆன்மீகத் தலைவர் ஒரு மதத்தை நேசிக்கிறவர்கள் மற்ற மதங்களுக்கான கௌரவத்தையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

## கனடாவின் நிதியுதவியை வெட்டும் திட்டம்

கொமன்வெல்த் அமைப்புக்கான நிதியுதவிகளை மீளாய்வு செய்யப் போவதாக, கனடா அறிவித்துள்ளது, கொமன்வெல்த் அமைப்புக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கொமன்வெல்த் அமைப்புக்கு கனடா ஆண்டு தோறும் 20 மில்லியன் டொலரை வழங்கி வருகிறது.பிரித்தானியாவுக்கு அடுத்து, கொமன்வெல்த்துக்கு அதிக நிதியுதவி வழங்கும் நாடாக, கனடாவே உள்ளது.

கொமன்வெல்த்துக்கான கனடாவின், நிதியுதவி வெட்டப்பட்டால், பெரும் நிதி நெருக்கடியை அந்த அமைப்பு எதிர்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், கொமன்வெல்த் செயலகம் கடும் அதிர்ச்சியடைந்துள்ளது.

# குறேஷியத் தலைவலியால் யுறோ போர்க்கொடி

குறேஷியா நாட்டை யுறோ ஒன்றியம் அணைத்த சில நாட்களில் அதற்குத் தலைவலி ஏற்பட்டுவிட்டது. தவறான முடிவென தலையில் குட்டிக்கொள்ளும் அளவிற்கு நிலைமை மோசமாக உள்ளதாக யுறோ அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார். குறேஷியா பழைய கம்யுனிச நாடு.

ஜேர்மனியினால் தேடப்பட்டுவந்த கம்யுனிச யுக உளவுப் படைத் தலைவர் ஒருவரைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி ஐரோப்பிய ஒன்றிய ஆணையம் ஐரோப்பிய பிடி ஆணை ஒன்றைப் பிறப்பித்திருந்தது.

1983ல் பவேரியாவில் நடைபெற்ற சண்டையின்போது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஒரு குழுவின் தலைவரைக் கொலை செய்வதற்கு ஜொசிப் பேக்கோவிச் உத்தரவிட்டார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

போர்க் குற்றங்களுக்காக இவரையும், இன்னும் சிலரையும் ஜேர்மனி வலைவீசித் தேடிவருகிறது.

ஆனால், யுறோ ஒன்றியம் தனது சட்டங்களைத் தீவிரமாக்குவதற்கு சில தினங்களுக்கு முன்னர் குறேஷியா முந்திக்கொண்டு இவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்களைக் கொண்டுவந்துவிட்டது.

குறேஷியாவின் போக்கு ஒன்றியத்தைச் சூடு பிடிக்க வைத்துவிட்டது. குறேஷியப் பிரதமர் ஸோறான் மிலனோவிச் ஒன்றியத்துக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாகவும், அதன் விளைவு பாரதூரமாக இருக்கப்போவதாகவும் கண்டித்துள்ளது. கோடிக்கணக்கான மில்லியன் பெறுமதி உதவிகளை குறேஷியா இழக்க நேரிடும் எனவும் எச்சரித்திருக்கிறது.

நிலைமை மோசமடைவதற்கு முன்னர் கபடத்தனமான சட்டத்தை மாற்றிக் கொள்ளவேண்டும் அல்லது விளைவுகளுக்கு முகம் கொடுத்துத்தான் ஆகவேண்டும் எனவும் ஒன்றியம் எச்சரித்துள்ளது.

# வெனிசுயெலாவை இருளில் முடக்க அமெரிக்க ராஜதந்திரிகள் சூழ்ச்சி



நாடுகளுக்கிடையில் உறவை வளர்ப்பதற்காக நியமிக்கப்படும் இராஜதந்திரிகள் பலர் உளவு வேலையைச் செய்வதாக சில நாடுகளில் குற்றஞ்சாட்டப்பட்டு வெளியேற்றப்படுகிறார்கள். மற்றும் சிலர் உள்நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைப்பதாக குற்றக் கூண்டில் நிறுத்தப்படுகிறார்கள். இப்படிக் குற்றச் சாட்டுக்கள் பல வகைப்படும்.

வெனிசுயெலா நாட்டில் கடமையாற்றிய இரண்டு அமெரிக்க இராஜ தந்திரிகளை அந்த நாட்டின் அதிபர் நிக்கலஸ் மதுறோ உள்நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டில் நாட்டைவிட்டு வெளியேற்றி உள்ளார்.

மின்சார உற்பத்திப் பெருக்கத்தை நாசமாக்குவதற்குத் துண்டுதலாக இருந்ததாகவும் உற்பத்தியைக் குறைப்பதற்கு உதவ சம்பந்தப்பட்டவர்களுக்கு லஞ்சம் வழங்கியதாகவும் இவர்கள் மீது குற்றஞ் சாட்டியுள்ளார். ஆனால் அமெரிக்கா இக்குற்றச்சாட்டில் உண்மையே கிடையாதெனக் கூறி நிராகரித்துவிட்டது. இதற்குப் பதிலடியாக அதிபர் மதுறோ அமெரிக்கர்களே வெளியேறுங்கள் எனக் கோஷம் எழுப்பிவருகிறார்.

## பட்டினி போட்டு பெற்ற மகனை கொன்ற தாய்!

4 வயது குழந்தையை பட்டினிபோட்டு கொலைக்கு காரணமான தாய்க்கு 15 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி கூறப்படுவதாவது:

குடிகார தாயார் குழந்தைகளை பட்டினி போட்டதாகவும், ஒரு குழந்தையின் மரணத்திற்கு காரணமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. மற்றுமொரு 5 வயது குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து 4 வயது குழந்தை கம்சாவின் மரணம் பற்றி வெளியே தெரிவித்தால் கொலை செய்வதாக மிரட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது மூத்த மகனான தாரிக் ஹான் (வயது 24) 4 வயது குழந்தை இறந்தபோது வீட்டில் இருந்ததாக கூறப்படுகிறது. இறந்த குழந்தையை புதைத்ததாக கூறப்பட்ட ஹானுக்கு இரண்டு வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

# ‘டயானா’ வாழ்க்கை படம் விமர்சிக்கிறார் Dr. ஹசன்ர கான்

டாக்டர் ஹசன்ர, டயானா மறைவதற்கு முன்னர் அவருடன் காதலில் இணைத்து பேசப்பட்டவர்.

டயானா பற்றிய படம் சரியான தகவல்களை தெரிவிக்காமல் டயானாவின் நண்பர்கள் பேசிய கிசுகிசு கதைகளை மையமாகக் கொண்டும் எனது உறவினர்கள் சிலர் கூறிய உண்மைக்கு முரணான தகவல்களையும் கோர்வையாக்கி தயாரிக்கப்பட்டுள்ளது என்று சாடுகிறார்.



டொடியை சந்திப்பதற்கு முன்னர், Dr. கானுடன் அவர் காதல் வயப்பட்டு தனது வாழ்வில் உண்மையான காதலை அனுபவித்தேன் என்று கூறியிருந்தார். அந்தக் ‘காதல்’ ஒரு திருமண பந்தத்துக்கு வர முடியாமையால் 1999ல் முடிவுக்கு வந்தது என்றார்.

இந்தப் படத்தில் இளவரசி டயானாவாக நடித்த நயோமி வட்ஸ் கூறுகையில் இளவரசர் வில்லியம் இளவரசர் ஹரி ஆகியோர் இதுபற்றி என்ன எண்ணுகிறார்கள் என்று எண்ண முடியாததால் நான் மௌனம் சாதிப்பதாக “சண்டே ரைம்ஸ்” பத்திரிகைக்கு தெரிவித்தார்.

‘DIANA HER LAST LOVE’ என்ற புத்தகத்தினால் ஈர்க்கப்பட்ட ஒலிசா கோர்ச்பீரல் என்பவர் இப்படத்தை இயக்கியுள்ளார்.



சுதந்திரப்போர் எதிரொலி

# பங்களாதேஷ் எம்.பிக்கு 43 வருடங்களின் பின் தண்டனை

பங்களாதேசின் பிரதான எதிர்க்கட்சி எம்.பிக்களில் ஒருவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. 1971ம் ஆண்டில் பாகிஸ்தானுடன் நடைபெற்ற சுதந்திரப் போரின்போது இந்த எம்.பி கொலை, இன அழிப்பு போன்ற குற்றங்களைப் புரிந்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். சுமார் 45 வருடங்களுக்குப் பின்னர் யுத்தக் குற்றங்களுக்கான வழக்கு நீதிமன்றம் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பங்களாதேசின் தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர்மீது இப்படியான குற்றச்சாட்டுகள் உள்ளபோதிலும் சலாகுதீன் குவாடர் சௌத்ரிதான் முதலாவதாகக் கூண்டில் நிறுத்தப்பட்டார். [illegible] மாதம் ஜமாத் இஸ்லாமிக் கட்சியின் தலைவர் அப்துல் பாதர் முல்லா என்பவருக்கு உச்ச நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 வயது பாடசாலை மாணவி மீது பாலியல் வல்லுறவு மத போதகருக்கு 15 ஆண்டுகள் சிறை

பாஸ்ரர் கெவேசி வன்டைக் (Kwesi Van Dyck) என்னும் கறுப்பினத்தவர் 11 வயது பாடசாலை மாணவி மீது பாலியல் வல்லுறவு மேற்கொண்டுள்ளார்.

45 வயது நிரம்பிய பாஸ்டர் வன் டைக் 11 வயது பாடசாலை மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்று குற்றம்சாட்டப்பட்ட நிலையில் தொடரப்பட்ட வழக்கில் லண்டன் நீதிமன்றம் 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

தற்பொழுதுள்ள சட்டத்தின் பிரகாரம் இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு வழங்கப்படும் சிறைத்தண்டனையை குற்றவாளி முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெற்கிலும் போட்டியிடுமா?

வட மாகாணசபைத் தேர்தலில் அமோக வெற்றியைத் தனதாக்கிக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெற்கிலும், குறிப்பாகத் தமிழர்கள் பரந்து வாழும் பகுதிகளில் நடைபெறும் மாகாணசபைத் தேர்தல்களில் பங்குபற்ற உத்தேசித்து வருவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## 400 பேரைக் கொன்றவருக்கு பிரித்தானியாவில் தஞ்சம்!



கென்யாவில் 400 பேரை கொலை செய்த ஜோன் தூவோவிற்கு குடிவரவு மேன்முறையீட்டு நீதிமன்ற மனித உரிமைச் சட்டத்தின் கீழ் மூன்று ஆண்டு கால தங்குமிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தான் திருப்பி அனுப்பப்பட்டால் கென்யாவில் கொலை செய்யப்படலாம் என்று அவர் தனது வாதத்தில் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த Newport பாராளுமன்ற உறுப்பினர் போல் பிளை இத்தனை பேரை கொன்றதாக ஒப்புக்கொண்ட ஒருவர் பற்றி இந்நாட்டு பொலிசார் விசாரணை செய்யாதது மிக்க கவலையளிக்கிறது என்றார்.

உள்நாட்டு அலுவலகம் இதுபற்றி தெரிவிக்கையில் தங்களுக்கு இந்த தீர்ப்பு ஏமாற்றம் தருவதாகவும், மேன்முறையீடு செய்வதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்றும் கைவிரித்தனர்.

# பிள்ளைகளை அங்கவீனர்களாகக் காட்டி மோசடி: தாய்க்கு சிறை

*எட்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் 350,000 உதவித்திட்ட மோசடி செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு நான்கு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார்.*

*அமென்டா வெப்பர் என்ற பெண்மணி தனது குழந்தைகள் பலவகையான உடல் நலக் குறைவுக்கு உள்ளானவர்கள் ஏன்று கூறி பலவிதமான அரச உதவிப் பணத்தைப் பெற்று வந்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.*

*தனது குழந்தைகள் அங்கவீனக் குறைபாடு உள்ளவர்கள் என்று கூறி போலியான விண்ணப்பங்களை இவர் செய்திருந்தார்.*

*வாரம் இவருக்கு 500.00 வரை அரசு உதவிப் பணம் வழங்கப்பட்டது.*

*இவரது குழந்தைகள் பலவிதமான மேடைகளில் தோன்றி பல சான்றிதழ்களைப் பெற்றிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இவரது வீட்டில் இரண்டு கார்கள், இரண்டு பியானோக்கள் உட்பட பல விலைமதிப்பற்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டன.*

## ஸ்லிங்ரன் உள்ளூராட்சி சபை எதிர்நோக்கும் தண்டப்பணம்!

*ஸ்லிங்ரன்* (Islington) *உள்ளூராட்சி மன்றம் தவறான வாகனத் தரிப்பிட சீட்டுக்களை 2008 முதல் விநியோகித்ததாகவும் இது சம்பந்தப்பட்ட விடயத்தில் நடைமுறைத் தவறு* (Procedural Impropriety) *ஏற்பட்டதாக ஒரு தண்டப்பற்றுச் சீட்டு சம்பந்தமான மனு மீதான தீர்ப்பால் 30 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் வரை அறவிடப்பட்ட தண்டப் பணம் மீளளிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.*

*சாரதி சே சோவ் என்பவர் £130.00 தண்டசீட்டுக்கு எதிராக தொடர்ந்த மேன்முறையீட்டில் நடுவர் அளித்த தீர்ப்பில் மேன்முறையீடு செய்யும் படிவத்தில் சில சொற்கள் தவறியிருப்பதாக கூறியே இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார். ஸ்லிங்ரன் சபையானது 700,000 வாகனத் தரிப்பிட பற்றுச் சீட்டுகளை 2008 ஏப்ரல் முதல் 2012 மார்ச் வரை வழங்கியிருந்தது. இதனால் அறவிடப்பட்ட தண்டப்பணம் 24.5 மில்லியன் ஆகும்.*

## குழந்தைகள் நலஉதவி குளறுபடி

*குழந்தைகள் நல உதவி* (Child benifit) *அண்மையில் கொண்டு வரப்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப 50,000 பவுண்களுக்கு மேல் வருமானம் பெறும் பெற்றோர் தன்னிலை மதிப்பீட்டு வரி பதிவு செய்தல் வேண்டும்* (Tax self assesment)

*இவ்வாறு பதிவு செய்யாதவர்கள் எதிர்வரும் ஜனவரி 31க்கு முன் பதிவு செய்து வரி செலுத்தாவிட்டால் அவர்கள் 10% -100% அபராதம் செலுத்த நேரிடும். பதிவு செய்து வரி செலுத்தினால் அவர்கள் தண்டனை பெறமாட்டார்கள்.*

*இது தொடர்பில் பெற்றோர்கள்* HMRC *இணையதளத்திற்கு சென்று தகவல்களை அறியுமாறு திருமதி 'லின் கோனர் தெரிவித்துள்ளார். தொழிற்சங்க செயலாளர் பிரான்சிஸ் குறிப்பிடுகையில் இதனால் பாதிப்பிற்கு உள்ளாகாத சில பெற்றோர்களும் வருமான வரி திணைக்களத்தில் இருந்து பதிவு செய்யுமாறு கடிதங்கள் பெறுவதாக குறிப்பிட்டார்.*

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் இரண்டாவது பாராளுமன்றத் தேர்தலும்

நாடு கடந்த தமிழீழ அரசின் பாராளுமன்றம் ஒக்டோபர் 1ம் திகதி கலைக்கப்பட்டு இரண்டாவது தவணைக்குரிய தேர்தல் ஒக்டோபர் 26ம் திகதி உலகளாவிய ரீதியில் நாடு கடந்த தமிழீழ அரசினது யாப்பில் இனங்காணப்பட்ட அனைத்து நாடுகளிலும் நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் அனன் பொன்னம்பலம் பத்திரிகைக்கு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பெண் நோயாளிகளின் அந்தரங்க உறுப்புக்களை படம் பிடித்த வைத்தியருக்கு 12 வருட சிறை

குடும்ப வைத்தியர் ஒருவர் தனது நூற்றுக்கணக்கான பெண் நோயாளிகளிடம் தவறான முறையில் உறுப்புக்களை வருடி அங்க சேஷ்டையில் ஈடுபட்டு வந்ததுடன், தனது கைக்கடிகார கேமரா மூலம் படம் பிடித்து வந்தது அம்பலத்துக்கு வந்துள்ளது.

1993ல் மங்களூர் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற இவர் தனது மனைவியைப் பிரிந்து வாழ்கிறார். இவருக்கு ஏழு பெண் சிநேகிதி உண்டு. இவரது கைக்கடிகாரத்தில் விசேட வீடியோ கேமரா பொருத்தப்பட்டிருந்தது. பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான இவருக்கு 12 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

**திரு.வெங்கடாசலம் இராஜேந்திரன்**

திரு.வெங்கடாசலம் இராஜேந்திரன் சிங்கப்பூரில் 07-10-2013ல் காலமானார்.

இவர் செல்வியின் அன்புக் கணவரும், கௌசல்யா, ஹரி கிருஷ்ணன், மது ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்பையாவின் அன்பு மாமனாரும், கனிஷ்காவின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 09-10-2013ல் திண்டுக்கல்லில் நடைபெற்றது.

**தொடர்புகட்கு**
**சுப்பையா 00919500861885**




MALIK & MALIK
Solicitors
Commisioners For Oaths
24 Hour Emergency
Crime & Immigration

- Immigrations Related
- Applications and Appeals
- Immigration
- EEA Law
- Entry Clearance
- Human Right claims
- Asylum Claim
- British Citizenship and Nationality
- Detention and Deportation
- Judicial review

Family Maters & Property
Divorce Maters | Residential
Ancillary Relief | Commercial
Other family Maters | Landlord

NO WIN NO FEE
Personal Injury
Road Traffic Accident
Slip and Trip
Work Related Accidents
Clinical Negligence

Crime (Public - Founding Available) & Immigration
24 Hour Police Station representation, Representation at Magistrate / Crown courts

MALIK & MALIK Solicitors
234-236 High Road, London NW10 2NX
Adaikalamuthu Ilanchelian
SOLICITOR
Tel : 0208 830 3050 / 07939 474 342


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திரு.செல்லையா நடராஜா

**(முன்னாள் வீரகேசரி பிரதம ஆசிரியர், (முன்னாள் சுடரொளி செய்தி ஆலோசகர்)**

யாழ்.கரவெட்டியைப் பிறப்பிடமாக கொண்ட செல்லையா நடராஜா அவர்கள் 05-10-2013 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான செல்லையா லட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும்,

ராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், ராஜ்மோகன் (கனடா), வதனா (கனடா), மீனா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை 09-10-2013 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

## லண்டனில் ஆர்ப்பாட்டம்!



இலங்கையில் நடைபெறும் மாநாட்டில், பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் கலந்து கொள்ளக்கூடாது என வலியுறுத்தி தமிழர்கள் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளார்கள்.

பிரித்தானியப் பிரதமரின் வாசல்ஸ் தலத்திற்கு முன்னதாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

இனப் படுகொலை புரிந்த இலங்கை அரசு நடத்தும், இம் மாநாட்டை டேவிட் கமரூன் புறக்கணிக்க வேண்டும் என்று தமிழர்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறார்கள். குறிப்பிட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பலர் பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்க விடையம் ஆகும்.

### தேவை

தமிழினி செய்தி
பத்திரிகைக்கு நிருபர்கள்,
படப்பிடிப்பாளர்கள் தேவை.
விண்ணப்பிக்கவும்.

tkpublish@yahoo.co.uk

## மரண அறிவித்தல்



### திரு.கந்தையா குகதாஸ்

யாழ். கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், இலண்டன் Portsmouth-ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா குகதாஸ் அவர்கள் 01-10-2013 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னார், காலஞ்சென்ற கந்தையா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், வரதலட்சுமி அவர்களின் அன்புக்கணவரும், ராஜன், ஜங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன், பத்மலோசினி (இலங்கை), குணரட்னம் தனலட்சுமி (இலங்கை), திருஞானசம்பந்தர் புஸ்பராணி (இலங்கை), குணசீலன், ஜெயசீலன் (பிரான்ஸ்), நவசீலன் பபா (இலங்கை) சத்தியசீலன் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கோபாலசிங்கம் தனலட்சுமி (இலங்கை), காலஞ்சென்ற இராஜலட்சுமி (இலங்கை), துரைராஜா (இலங்கை), ஜெகநாதன் தயா (சுவிஸ்), அருட்சகோதரி அருணாம்பிகை (சுவிஸ்), தனபாலசிங்கம் புஸ்பராணி (ஜேர்மனி), சத்தியநாதன் திருமகன் (சுவிஸ்), ரகுநாதன் நித்திலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

*அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.*
*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

தகவல்
**குடும்பத்தினர், வதனி, பிரித்தானியா**
**தொலைபேசி : +442392421985**

**MANGO PALACE**
தெற்கு லண்டனில்
நாவுக்கு சுவையூட்டும்
தென் இந்திய உணவுகட்கும்
நாட வேண்டிய இடம்



114 Tooting High Street,
London SW 17 okk
Mango Palace, 1 e gmail.com
020 8682 0009 | 020 8682 0020

**Nallur Kumaran Textiles**
*The right choice since 2000*
*We specialise in:*
- *Pure Silk Sarees*
- *Fancy Sarees*
- *New design Anarkalees*
- *And all other Indian designs*
- *Costumes & Costume Jewellery for Dancers*
- *Indian Musical Instruments*

New Stock arrives every month from Mumbai
We also Stitch Saree blouses to your taste
*1023 London Road, Thornton Heath, Surrey, CR7 6JF (A23)*
Tel: 020 8684 1026
or
079 6076 1606



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டனத்திற்கு ஆளான கமரோன்



பிரதமர் கமரோன் எரிவாய்வு விலையேற்றத்தால் கண்டனத்திற்கு உள்ளானார். பத்துவீதமான விலை உயர்வால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த குளிர்காலத்தில் பல வயோதிகர்கள் எரிவாய்வு விலையேற்றம் காரணமாக இறக்கலாம் என்று கருதப்படுகிறது.

புதிய மின்சார வாயு விலையேற்றம் காரணமாக கட்டணங்களை கொண்டுவர வேண்டும் என்று எதிர்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

## முதலமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்க ஈ.பி.டி.பி தயார்

வடமாகாண சபையில் முதலமைச்சருடன் ஒத்துழைப்பு நல்கி நடவடிக்கைகளை தமிழ் மக்களுக்குச் சாதகமாக்கச் செய்ய தான் முன்வருவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

*பிரித்தானிய பாராளுமன்றில்*

## பிரதமர், அமைச்சர்கள், உறுப்பினர்களை ஆர்டர் சொல்லி அடக்கும் சபாநாயகரை அடக்கிய பெண்மணி!

ஜோன் பேர்கோ, பிரித்தானிய பாராளுமன்றத்தின் சபாநாயகர். புள்வேட் என்ற பெண்மணியின் வாகனத்தின் மீது உரசியதாக கூறப்பட்ட விவகாரத்தில் பெண்மணி அவரை அகங்காரம் பிடித்தவர் என்று கூறினார்.

தனது வாகனத்தில் எத்தனை கீறல்கள் இருக்கிறது என்பதனை தான் அறிவேன்' என்றும் இந்தக் கீறல்கள் இவரால் ஏற்படுத்தப்பட்டது என்றும் இந்தப் பெண் புகார் கூறினார். இந்த உரசல் பற்றி தன்னிடம் மன்னிப்பு கேட்பதற்கு பதிலாக தன்னை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை இந்த நபர் என்றும்' அந்தப் பெண்மணி கூறினார்.

இது பற்றி கருத்து தெரிவித்த வேறொரு நபர் பேர்கோவின் கார் இடம் பிடிக்க முயற்சிக்கையில் கார்களை உரசியதை தான் கண்டதாக அண்மையில் உள்ள உணவகம் ஒன்றில் பணி புரியும் பெண்ணொருவர் தெரிவித்தார்.

இது பற்றி சாபாநாயகர் கூறுகையில், என்னை அகங்காரம் பிடித்தவர், மன்னிப்பு கேட்கவில்லை என்று கூறியது சற்றும் பொருந்ததாது ஏனெனில் நான் எவ்வித கீறல்களையும் ஏற்படுத்தவில்லை என்றார். ஆயினும் தான் ஒரு சிறந்த சாரதி அல்ல என்பதனை ஒப்புக் கொண்டார்.


CHANCERY CS SOLICITORS

2007 மார்ச் 07ம் திகதிக்கு முன்னர் அரசியலடைக்கலம் கோரி இதுவரை பதில் இல்லையா? எம்மை தொடர்பு கொள்ளுங்கள்!

இது தவிர................

We specialise in:

- Immigration Related Applications and Appeals
  - Asylum Claim & Human Rights
  - EEA Law & British Citizenship
  - Detention & Deportation and Judicial Review
- Family Matters
- Divorce and Adoption
- Employment Law
- Conveyancing & property
  - Commercial
  - Residential & Employment Law

1A, Landor Road London SW9 9RX

Tel No: 020 7737 6379
Fax No: 020 7274 0099





Vaanee Arts
வாணி கலைக்கூடம்

இத்தாலியில் பலகாலங்களாக இயங்கிவரும் எமது நிறுவனமான வாணி கலைக்கூடம் தற்போது ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். உங்களுக்கு தேவையான இந்தியா இத்தாலிய முறையிலான சகல ஓவிய வர்ண சிற்ப வேலைகளுக்கு எம்மிடம் தொடர்பு கொள்ளலாம்.

எமது சேவைகளானவை:

- உங்கள் குடும்பத்தினரினதோ அல்லது நண்பரினதோ போட்டோக்களை அதேபோல வரைதல்
- கையால் வரையப்படும் விளம்பர பலகைகள் மற்றும் கடைகளுக்கு தேவையான விளம்பரங்கள்
- இத்தாலிய முறையிலான சுவர்களுக்கான சுவர் அலங்கார வர்ணங்கள் சுவரோவியங்கள் தீட்டுதல்
- கோயில்களுக்கான கோபுர வர்ணங்கள் தீட்டுதல் மற்றும் திரைச்சேலைகள் மணவறை வர்ணம் தீட்டுதல்
- மாபிள் மற்றும் மரங்கள் போல வர்ணம் தீட்டுதல்
- போட்டோ Editing & Album Designing

இன்னும் பல...

தொடர்புகளுக்கு:
Selvan
00390161912550
Baheeram
00441443314744
மின்னஞ்சல்:
Vaanee@hotmail.it

தகவலறிய எனது இணையத்தளமான www.vaaneearts.com இதற்கு சென்று gallery யில் பார்க்கவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org